REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 3 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 90 இல. 29 | Thursday 3, February, 2022 | 20 பக்கங்கள் | 30/-




## 'கிராமத்துக்கான வேலைத்திட்டம்' ; ரூ. 100 பில்லியன் ஒதுக்கீடு

# நாடு முழுவதும் ஒரு இலட்சம் அபிவிருத்தி திட்டங்கள்

### இன்று காலை 8.52 மணிக்கு ஆரம்பம்



**நிதியமைச்சரினால் 2022 பட்ஜட் முன்மொழிவுக்கமைய நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை பலப்படுத்தும் பாரிய திட்டம்**

**ஷம்ஸ் பாஹிம்**

'கிராமத்துக்கான ஒரு இலட்சம் வேலைத்திட்டம்' எனும் தொனிப்பொருளிலான பாரிய அபிவிருத்தித் திட்டம் இன்று நாடு முழுவதும் சுபநேரத்தில் ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

நாட்டின் சகல பிரஜைகளினதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்தி நாட்டை சுபீட்சமாக மாற்றும் இந்தத் திட்டத்துக்கு 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ரூ.100 பில்லியன் நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்.

06

## சகல பாடசாலைகளுக்கும் மார்ச் 07 வரை விடுமுறை

### கல்வியமைச்சு நேற்று அறிவிப்பு

கல்வி அமைச்சு MINISTRY OF EDUCATION

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 07ஆம் திகதி முதல் மார்ச் 07 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

06

## ராகம வைத்திய பீடத்தின் மாணவர் மீதான தாக்குதல்

### விசாரணைக்கு சரத் வீரசேகர உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**




ராகம வைத்திய பீடத்தின் மாணவர்கள் மீதான தாக்குதல் குறித்து விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று (02) விசேட அறிக்கையொன்றை விடுத்த அமைச்சர், இது தொடர்பில் இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

வெளியாட்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ராகம

06


## Airtel records the fastest 5G speeds in Sri Lanka




Showcasing the highest 5G speeds in Sri Lanka is TRCSL Chairman, Secretary to the Ministry of Technology and Secretary to the State Ministry of Digital, Technology & Enterprise Development, Mr. Jayantha De Silva and Airtel Lanka, CEO & Managing Director, Mr. Ashish Chandra

Airtel Lanka demonstrated the 5G readiness of its network as it conducted LIVE 5G trials over a commercial network and recorded speeds of over 1.9Gbps - the highest speed ever recorded in the country.

"Sri Lanka is a market that has been defined by pioneering technology adoption and the investments we are making today into ramping up our 5G capabilities will lay the digital foundations for Sri Lanka's next chapter of growth. As witnessed today, we were able to record the highest internet speed in the country, and will continue to break records as we move towards the future," Airtel Lanka Managing Director and CEO, Ashish Chandra stated.

"Our high-speed network will have a huge impact on the lives of our customer by empowering them and is in line with our vision to provide to every citizen of our country, a world class network at most affordable price. It is a proud moment for everyone at Airtel," he added.

Airtel 5G is fully equipped to deliver up to 10 times more speed, 10 times lower latency and 100 times concurrency compared to existing technologies. Building on the company's significant investments towards network upgrades, the commencement of 5G trials puts Airtel among the world's latest in mobile technology and network innovations.

Airtel announced that its world-class 4G infrastructure around the island is 5G ready, thus facilitating a seamless transition to the next generation of networking. Airtel was able to do this through trial frequency allocations in 3500 MHz band with the NSA (Non Stand Alone) network technology.

This demonstration has proved the 5G readiness of Airtel's network across all domains.

airtel
THE 5G READY NETWORK


## நாடு முடக்கத்திற்கு தயாராவதாக எச்சரிக்கை

### விழிப்பாக இருக்க GMOA அறிவுறுத்து

தற்போதைய கொவிட் பரவல் அதிகரிப்பானது நாட்டை முடக்க வேண்டிய சூழ்நிலைக்கும் இட்டுச் செல்ல வாய்ப்புள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) எச்சரித்துள்ளது. கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அதன் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே இந்த எச்சரிக்கையை

06

## நாட்டில் நியோகோவ் வைரஸ் பரவும் அபாயம்

### சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை



தென்னாபிரிக்காவின் புதிய கொவிட் மாறுபாடான நியோகோவ் அல்லது BA.2 வைரஸ், எதிர்வரும் நாட்களில் நாட்டிற்குள் நுழையும் அபாயம் இருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

06



இந்தியாவிடமிருந்து பெற்றோலியப் பொருட்களை கொள்முதல் செய்வதற்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் (LOC) பெறுவதற்காக இந்திய எக்ஸிம் வங்கியுடன் அரசு, நேற்று (02) நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே முன்னிலையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல மற்றும் எக்ஸிம் வங்கியின் தலைமை பொது முகாமையாளர் கௌரவ் பண்டாரியும் கைச்சாத்திட்டனர். (படம்: சுலோச்சன கமகே)

## ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்கும் முடிவு 07ஆம் திகதி

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்குவது தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் 7ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நீதியரசர்களான மேனகா விஜேசுந்தர மற்றும் நீல் இத்தவெல ஆகியோர் முன்னிலையில் நேற்று புதன்கிழமை விசாரணைக்கு

06

## மின்சார சபைக்கு தொடர்ந்து ஒரு வாரத்திற்கு எரிபொருள்

### எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில உறுதி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மின்சார சபைக்கு ஒரு வாரத்திற்குத் தேவையான எரிபொருளை வழங்குவதற்கு பெற்றோலிய கூட்டுத்தாபனம் உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

06

### சட்டவிரோத வருமானம் ஈட்டல்:

## விமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



சட்டவிரோதமாக 75 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டியமை தொடர்பாக விமல் வீரவன்சவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை ஜூன் 17 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த

06

## சுதந்திர தினத்தன்று மதுபான, இறைச்சி கடைகளுக்கு பூட்டு



இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அனைத்து உரிமம் பெற்ற

06

## கிழக்கு செயலாளர்கள் திடீரென மாற்றம்!

### ஆளுநர் அனுராதா யஹம்பத் அதிரடி



மாகாண அமைச்சுகளின் செயலாளர்களிடையே கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அதிரடியாக சில மாற்றங்களை செய்துள்ளார். அதற்கான இடமாற்ற கடிதங்கள் கிழக்கு மாகாண ஆளுநரால்

06

### விக்கல் வீராச்சாமி



அண்ணே, தமிழ் மக்களுக்கு பிரச்சினை பிரச்சினை எண்டு இந்த தமிழ் தலைவர்கள் எந்த நேரமும் அறிக்கைகள விட்டு கொண்டிருக்கினம், ஏன் அண்ணே.....

அதுதான் நானும் யோசிக்கிறேன், தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சனை இருக்குது, நல்லாத்தானே இருக்கினம், இவங்க அரசியல் நடத்துறாங்க போல இருக்கு...!!!

### வீட்டில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில்

## கிராண்ட்பாஸில் போதைப்பொருள் அகப்பட்டது

கொழும்பு கிராண்ட்பாஸில் வீடு ஒன்றில் பங்கரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது!

06

### பொருட்கள் இறக்குமதிக்காக எனக்கூறி

## ரூ.25 கோடி பெறுமதியான டொலர்களை கடத்தியவருக்கு விளக்கமறியல்

### வெள்ளவத்தை வர்த்தகருக்கு இன்றுவரை தடுப்பு



சுமார் 25 கோடி ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர்களை வெளிநாட்டுக்கு, பொருட்களை இறக்குமதி செய்வதாக கூறி

06

### 21 மீனவர்களையும்

## விடுவிக்க நடவடிக்கை முன்னெடுக்குமாறு ஸ்டாலின் கடிதம்

03



TRIPLE BLASTER இப்போது புதுப்பொழிவுடன்!

Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு

எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS

Anytime Data 1.5GB

மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)

செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்

*உள்நாட்டு அழைப்புகளுக்கு மட்டுமே ! நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/21/09

Dialog எதிர்காலம் இன்றே.

# சர்வதேச செய்திகள்

## கினியா பிசவு: இராணுவ சதிப்புரட்சிக்கான முயற்சி



மேற்கு ஆபிரிக்க நாடான கினியா பிசவுவில் இராணுவ சதிப்புரட்சி முயற்சியில் பாதுகாப்பு படையினர் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

எனினும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும், "ஜனநாயகத்திற்கு எதிரான தாக்குதல் தோல்வி அடைந்தது" என்றும் அந் நாட்டு ஜனாதிபதி உமரோ சிசோகோ எம்பாலோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி எம்பாலோ மற்றும் பிரதமர் நுனோ கோமஸ் நபியாம் அமைச்சரவை கூட்டம் ஒன்றில் பங்கேற்க சென்றிருந்தபோது அரச மாளிகையை கடந்த செவ்வாய்க்கிழமை ஆயுததாரிகள் சுற்றி வளைத்துள்ளனர்.

எனினும் அந்த நாட்டின் நிலைமை பற்றி உறுதி செய்ய முடியாதுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னாள் போர்த்துக்கல் காலனியான கினியா பிசவுவில் 1980கள் தொடக்கம் 9 இராணுவ சதிப்புரட்சிகள் அல்லது அதற்கான முயற்சிகள் இடம் பெற்றுள்ளன.

## இந்தியாவில் மேலும் 16 விமானநிலையங்கள்



மத்திய இந்தியாவின் ஐந்து மாநிலங்களிலும் 16 புதிய விமானநிலையங்கள் அமைக்கப்படும் என்று ஒன்றிய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தியா, பீ.எம்.காதி சக்தி மாநாட்டில் குறிப்பிட்டார்.

மத்திய பிரதேஷ், சந்தீஸ்கர், உத்தரப் பரதேசம், ராஜஸ்தான் மற்றும் மஹாராஷ்ட்ரா ஆகிய ஐந்து மாநிலங்களும் இதில் உள்ளடங்கும்.

கடந்த 70 ஆண்டுகளில் 74 விமானநிலையங்கள் மாத்திரமே கட்டப்பட்டுள்ளன. கடந்த ஏழு ஆண்டுகளில் மேலும் 66 விமானநிலையங்கள் இயங்க ஆரம்பித்துள்ளன. தற்போது இந்தியாவிடம் மொத்த 140 விமானநிலையங்கள் உள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

## பாக். மீதான தடையை நீக்க ஐரோப்பா மறுப்பு



பாதுகாப்பு விடயங்களைக் கவனத்தில் கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு சேவையில் ஈடுபட பாகிஸ்தானின் விமானங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க ஐரோப்பிய ஒன்றிய முகவரகம் மீண்டும் மறுப்பு தெரிவித்துள்ளது.

"பாகிஸ்தான் விமானங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க அனுமதி வழங்க முன்னர் அது தொடர்பில் மதிப்பீடு செய்யப்படுமென ஐரோப்பிய ஒன்றியத்தின் விமான போக்குவரத்து பாதுகாப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## 57 நாடுகளில் ஒமிக்ரோன் துணை ரகம் கண்டுபிடிப்பு



ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திரிபின் புதிய துணைரக வைரஸ் 57 நாடுகளில் அடையாளம் காணப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த திரிபு 10 வாரங்களுக்கு முன் முதன்முதலில் தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகளின் மூலம் இந்தத் துணை ரக வைரஸ் ஒமிக்ரோனை விட அதிவேகத்தில் பரவக்கூடியது என்பது தெரிய வந்தது.

இருப்பினும் புதிய துணை ரகத்தைப் பற்றிய தகவல் தற்போது மிகக் குறைவான அளவில் உள்ளதென நிபுணர்கள் கூறியுள்ளனர்.

ஒமிக்ரோன் திரிபு டெல்டா போன்று இல்லாமல் கடுமையான கொவிட்–19 நோயை ஏற்படுத்தாது. அதைப் போன்று அதன் துணை ரகமும் உள்ளது என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.

இருப்பினும் நோய்த்தொற்று என்பதே அபாயகரமானது, அதற்கு ஆளாகாமல் பாதுகாப்பாக இருக்கும்படி அவர்கள் மக்களை எச்சரித்துள்ளனர்.

## ரஷ்யாவை போருக்கு இழுப்பதாக அமெ. மீது புட்டின் குற்றச்சாட்டு

உக்ரைனில் ரஷ்யாவை போருக்கு இழுக்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபடுவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் குற்றஞ்சாட்டி உள்ளார்.

ரஷ்யா மீது மேலும் தடை விதிப்பதற்கு சாக்காக மோதல் ஒன்றை பயன்படுத்துவதே அமெரிக்காவின் நோக்கமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பாவில் நேட்டோ கூட்டணி படைகள் பற்றிய ரஷ்யாவின் கவலையை அமெரிக்கா பொருட்படுத்தாமல் இருப்பதாகவும் புட்டின் கூறினார்.

உக்ரைன் மீது ரஷ்யா ஆக்கிரமிப்பு தொடுக்கவிருப்பதாக அமெரிக்கா மற்றும் அதன் நேட்டோ கூட்டணி குற்றஞ்சாட்டுகின்றபோதும், ரஷ்யா அதனை தொடர்ந்து மறுத்து வருகிறது.

மொஸ்கோவில் ஹங்கேரி பிரதமர் விக்டர் ஓர்பனுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், பேசிய புடின், "உக்ரைனின் பாதுகாப்பு குறித்து அமெரிக்கா பெரிதாக அக்கறை காட்டவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால், ரஷ்யாவின்



வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவது தான் அதன் முக்கிய பணி. இந்த இலக்கை அடைவதற்கான ஒரு கருவியாக உக்ரைன் இருப்பதாக நினைக்கிறேன்" என்றார்.

இதேவேளை ரஷ்யாவின் படையெடுப்பு உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான போராக மாத்திரம் இருக்காது என்றும் ஐரோப்பாவில் முழு அளவிலான போர் ஒன்றாக இருக்கும் என்றும் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## ஐ.அரபு இராச்சியத்திற்கு உதவ அமெரிக்க போர் கப்பல் விரைவு



யெமன் கிளர்ச்சியாளர்களின் ஏவுகணை தாக்குதலை அடுத்து ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு உதவ போர் விமானம் மற்றும் ஏவுகணை அழிக்கும் போர்க்கப்பலை அமெரிக்கா அனுப்பவுள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின் மற்றும் அபூதாபி முடிக்குரிய இளவரசருக்கு இடையே இடம்பெற்ற தொலைபேசி உரையாடலை அடுத்தே, அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

யெமனில் ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படையில் ஐக்கிய அரபு இராச்சியம் அங்கம் வகிக்கிறது. அந்த நாட்டின் மீது கடந்த திங்களன்று யெமனில் இருந்து மூன்றாவது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது.

## டொங்காவில் பொது முடக்கம்




டொங்கா தலைநகர் நுகுவாலோபாவில் இரு புதிய கொவிட் தொற்று சம்பவங்கள் பதிவானதை அடுத்து பொது முடக்க நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய எரிமலை வெடிப்பு மற்றும் சுனாமி அனர்த்தத்தை அடுத்து அந்த நாட்டுக்கு மனிதாபிமான உதவிகள் வர ஆரம்பித்துள்ள நிலையில் துறைமுகத்திலேயே இந்த இரு சம்பவங்களும் அடையாளம் காணப்பட்டதாக பிரதமர் சியோசி சொவலேனி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று புதன்கிழமை மாலை அமுலுக்கு வந்த முடக்கநிலை ஒவ்வொரு 48 மணி நேரத்திலும் மீளாய்வுக்கு உட்படத்தப்படவுள்ளதாக பிரதமர் அறிவித்துள்ளார்.

## அதிவேக 5G வலையமைப்பை தரும் எயார்டெல்



எயார்டெல் லங்கா தனது வலையமைப்பை 5G ஆக மாற்றுவதற்கான சோதனைகளை நடத்தியது 1.9Gbps க்கும் அதிகமான வேகத்தைப் பதிவுசெய்தது. இது நாட்டில் இதுவரை பதிவுசெய்யப்பட்ட அதிகபட்ச வேகமாகும்.

"இலங்கையானது முன்னோடி தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் வரையறுக்கப்பட்ட ஒரு சந்தையாகும், மேலும் எமது 5G திறன்களை அதிகரிப்பதற்கு இன்று நாம் செய்துவரும் முதலீடுகள் இலங்கையின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கான டிஜிட்டல் அடித்தளத்தை அமைக்கும். நாட்டில் அதிகூடிய இணைய வேகத்தை பதிவு செய்ய முடிந்தது, மேலும் எதிர்காலத்தை நோக்கிச் செல்லும்போது சாதனைகளை முறியடிப்போம்," என எயார்டெல் லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆஷிஷ் சந்திரா தெரிவித்தார்.

"எங்கள் அதிவேக நெட்வொர்க் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அதிகாரமளிப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும், மேலும் நமது நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகவும் குறைந்த விலையில் உலகத் தரம் வாய்ந்த நெட்வொர்க்கை வழங்க உள்ளது. எயார்டெல்லில் உள்ள அனைவருக்கும் இது ஒரு பெருமையான தருணம்," என்று அவர் மேலும் கூறினார்.

எயார்டெல் 5G ஆனது தற்போதுள்ள சக தொழில்நுட்பங்களுடன் ஒப்பிடும்போது 10 மடங்கு அதிக வேகமாகும். நெட்வொர்க் மேம்படுத்தல்களை நோக்கி நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க முதலீடுகளை உருவாக்கி, 5G சோதனைகளின் தொடக்கமானது எயார்டெல்லை உலகின் சமீபத்திய மொபைல் தொழில்நுட்பம் மற்றும் நெட்வொர்க் கண்டுபிடிப்புகளில் முன்னிலையில் வைத்துள்ளது.




## Asset Draft - எசட்லைனிடமிருந்து செயற்பாட்டு மூலதனத்துக்கான தீர்வு



செயற்பாட்டு மூலதனத்துக்கான தேவையைக் கொண்டுள்ள வர்த்தக சமூகத்துக்குஉதவும் வகையில் என்றAsset Draft புதிய சேவையை எசட்லைன் லீசிங் கம்பனிலிமிடட் (எசட்லைன்) அண்மையில் அறிமுகப்படுத்தியிருந்தது. சிறியமற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் நிதித் தேவைகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், இத்துறையில் உள்ள வணிகங்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் செயற்பாட்டு மூலதனத்தை அடையமுடியாத வகையில் உள்ள வரையறைகள் இன்றி மேலதிகப் பற்று வசதியைப் போல இது அமையும். இதுகுறுகிய காலத்துக்கு மாத்திரமன்றி நீண்டகால,ஆண்டு முழுவதும் பணவரவை முன்னேற்றக் கூடிய நிதியளித்தல் மற்றும் வணிக வாய்ப்புகளை மேம்படுத்தவும் நிதியுதவி வழங்குகிறது.

அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றிய எசட்லைன் பிரதமநிறைவேற்று அதிகாரியும், பணிப்பாளருமான அஷான் நிசங்க குறிப்பிடுகையில்,"எமதுநாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருக்கும் தொழில் முனைவோர்,சிறியமற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதேஎப்பொழுதும் எமதுநோக்கமாகும். அவர்களின் முன்னேற்ற மேநாட்டின் முன்னேற்றம் என்பதுடன், இந்தப் பயணத்துக்கு எமது உற்பத்தி மற்றுமொரு மைல்கல்லாக அமையும் "என்றார்.

எசட்லைன் லீசிங் கம்பனிலிமிடட் நிறுவனத்தின் பிரதமநிறைவேற்று அதிகாரியும் பணிப்பாளருமான அஷான் நிசங்க, ருவன் கென்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தின் உரிமையாளர் ருவன் டாபரேவுக்கு Asset Draft வவசதிகளைக் கையளிக்கிறார்.

## 'Oukitel' மற்றும் 'Blackview' Smart Phone' களின் இலங்கை விநியோகஸ்தராக Brantel நிறுவனம் நியமனம்

இலங்கையில் Etel கையடக்கத் தொலைபேசிகளின் வணிக நாமத்தைக் கட்டியெழுப்பிய Brantel நிறுவனம், ஐரோப்பாவின்முக்கியமானஇடங்களை உள்ளடங்கிய, உலகம் முழுவதுமான 80 நாடுகளில் பாவனைக்குப் பிரபலமான மேலும் இரண்டு Smart phone களின் விநியோகஸ்தத்தைத் தனதாக்கியுள்ளது.

சீன உற்பத்திகளான Oukitel" மற்றும் "Blackview கைபேசிகளின் அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தராக நியமனம் பெற்றதுடன்,Brantel நிறுவனமானது நீடித்த பாவனை, அதிசிறந்தj Battery பாவனை, உயர்வான கொள்ளவுடைய RAM மற்றும் ROM சிறப்பான கமெரா மற்றும் உயிரியல் முறையிலான உறுதிப்படுத்தல் உட்பட்ட புத்தம்புதிய அம்சங்களுடன் கூடிய உத்தரவாதத்துடனான கையடக்கத் தொலைபேசிளை சந்தைப்படுத்த முதலில் தெரிவுசெய்யவுள்ளது.

இந்த இரண்டு தயாரிப்புக்களுடன்,




சிறப்பம்சங்கள் மற்றும் செயலாற்றல் ஆகியவற்றில் சந்தையிலுள்ள புத்தம் புதிய Smart phoneகளுக்கு நிகராகவும்; ஆனால் உலகளவில் முன்னணி தயாரிப்பு நாமங்களின் விலைப்பட்டியலை விட குறைந்த விலையில் வழங்கிவரும் தமது மூலோபாயங்களை Brantel தொடரவுள்ளது. Oukitel தயாரிப்பு வடிவங்களில் Brantel, உச்சபட்ச இயக்கு சக்தியை வழங்கக்கூடிய P60 octacore processor இனால் இயங்குவதும், அதியுயர் தரமான எடுக்க உதவும் தன்னிகரற்ற 20 MP கொண்ட தரமான கமெராவுக்காக அறியப்படுவதுமான C21 I ஐ வழங்குகிறது. மற்றொன்று பிரகாசமான வர்ணங்களுடனும் 6.49 அங்குல அதிதுல்லியமான HD+ தரத்துக்கு மேலதிகமாக ஈர்ப்பினை ஏற்படுத்தும் கணினி வலுவுடனும் வரும் ஆரம்பநிலை Oukitel C19 . Blackview விடமிருந்து நிறுவனமானது பலவித வர்ணங்களிலும் octacore 4Gநவநாகரிக Smart phone ஆன Blackview A90, "Budget king" Blackview A80 Plus ஆகியவற்றை வழங்குகிறது. இவ் Smart phone களை Brantel காட்சியறைகளிலும், www.brantelonline.com க்கு விஜயம் செய்வதன் மூலமாகவும் அல்லது நாடு முழுவதும் உள்ள விற்பனையாளரிடமும் கொள்வனவு செய்துகொள்ளலாம். இணையவழி வாடிக்கையாளர் 15வீதம் வரையிலான விசேட விலைக்கழிவுகளை பெற்றுக்கொள்வதோடு நாடு முழுவதுமான விநியோக வசதிகள் வழங்குவதாகவும் இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

## சிறந்த தொழில் வழங்குநர் நாமமாக தெரிவாகியதையிட்டு தனது ஊழியர்களை கௌரவிக்கும் அமானா வங்கி



ஆசியாவின் சிறந்த தொழில் வழங்குநர் நாமமாக தெரிவாகியதையிட்டு அமானா வங்கி தனது ஊழியர்களை கௌரவிக்கின்றது

அண்மையில்World HRD Congress இனால்ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆசியாவின் சிறந்த தொழில் வழங்குநர் வர்த்தக நாம விருதுகள் வழங்கும் நிகழ்வில், ஆசியாவின் சிறந்ததொழில் வழங்குநர் வர்த்தக நாமங்களில் ஒன்றாக அமானா வங்கி தெரிவாகியிருந்தது. இலங்கையின் சிறந்த தொழில் வழங்குநர் வர்த்தக நாமங்களில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டிருந்ததைத் தொடர்ந்து, பிராந்திய ரீதியிலான இந்தகௌரவிப்பு அமானா வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒன்லைன் கட்டமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் அமானா வங்கிக்கான இந்தவிருதை வங்கியின் செயற்பாடுகளுக்கான உபதலைவர் இம்தியாஸ் இக்பால் பெற்றுக் கொண்டார்.

ஆசியாவின் சிறந்த தொழில் வழங்குநர் வர்த்தக நாமத்துக்குரிய வெற்றிக் கிண்ணத்தையும், சான்றிதழையும் அமானா வங்கியின் மனிதவளங்கள் பிரிவின் தலைமை அதிகாரி பர்ஹான் ரிஃபாய்,வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீரிடம் கையளிப்பதையும், அருகில் வங்கிச்செயற்பாடுகளுக்கான உபதலைவர் இம்தியாஸ் இக்பால் காணப்படுவதையும் காணலாம்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 பெப்ரவரி 3 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்



**தொழுகை நேரம்**
01 முதல் 06 வரை
சுபஹ் - 05.11
ழுஹர் - 12.26
அஸர் - 03.48
மஃரிப் - 06.20
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**
பிலவ வருடம் தை 21
ராகுகாலம் : பகல் : 01.30 - 03.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: மரணசித்த யோகம்
திதி: திரிதியை

**இராசி பலன்கள்**
மேஷம் - பொறுமை
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - வெற்றி
மகரம் - சுகம்
கும்பம் - மறதி
மீனம் - செலவு
கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# 18 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளும் வாக்காளர்கள்

### வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்ய வாய்ப்பு




இவ்வாண்டு முதல், 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளும், வாக்காளர் பதிவேட்டில் தங்கள் பெயர்களை பதிவு செய்ய வாய்ப்பு வழங்கப்படுமென தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, 18 வயது நிறைவடைந்த அனைவரது பதிவும் பெப்ரவரி 01ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 31 ஆம் திகதி வரையான நான்கு மாத காலப்பகுதியில் 18 வயதை பூர்த்தி செய்வோர் தனித்தனியாக வாக்களிக்க பதிவு செய்ய முடியுமென தேர்தல் ஆணையாளரான சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜூன் முதல் செப்டம்பர் வரை 18 வயது நிரம்பியவர்களுக்கான வாக்காளர் பதிவு செப்டம்பர் 30ஆம் திகதிக்குள் நடைபெறும். அதன்படி, தேர்தல் அறிவிக்கப்படும் போது, சான்றளிக்கப்பட்ட வாக்காளர் பதிவேட்டின் 06

களனி பல்கலைக்கழக மோதல் சம்பவம்:

# தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தரும் விளக்கம்

### குறிப்பிட்ட சாரதி தற்காலிக பணிநீக்கம்




களனி பல்கலைக்கழக ராகம வைத்திய பீடத்தில் மாணவர்கள் உள்ளிட்ட இருதரப்பினரிடையே ஏற்பட்ட மோதலுடன் தொடர்புடைய அபிவிருத்தி அதிகார சபைக்குரிய KI 2376 என்னும் இலக்கமுடைய வாகனத்தின் சாரதி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊடகங்களில் பிரசாரம் செய்யப்பட்டுள்ளது. தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான இந்த மோட்டார் வண்டி எந்த ஒரு அதிகாரம் பெற்ற அதிகாரியின் அனுமதியுமின்றி தன்னிச்சையாக அந்த இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 06

உலகளாவிய கொரோனா பரவல்:

# சுற்றுலாத்துறை மீண்டும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வரும் நிலையில் நாட்டின் சுற்றுலாத்துறை மீண்டும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்தே பெருமளவு சுற்றுலாப்பயணிகள் வருகை தரும் நிலையில் தற்போது அந்த நாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனால் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் ஐரோப்பிய நாடுகளில் தினமும் 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதே போன்று இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் இலட்சக்கணக்கானோர் தினமும் வைரஸ் தொற்று நோயாளர்களாக இனங்காணப்பட்டு வருகின்றனர். அந்த நாட்டின் சுகாதார கட்டுப்பாடுகள் காரணமாக அங்கிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது. இந்தியாவிலும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இத்தகைய நிலையில் 06

# நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய நிபுணர் அவசியம்



நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு நிபுணர்களின் உதவி அவசியமானது எனவும், நாட்டின் அபிவிருத்திக்கு எதிர்காலத்திலும் நிபுணர்களின் உதவியை அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கை தொழில் வல்லுனர்கள் சங்கத்தின் புதிய செயற்குழு உறுப்பினர்கள் அலரி மாளிகையில் நேற்று (02) பிற்பகல் சந்தித்த போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது இலங்கை தொழில் வல்லுனர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் பிரதமருக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்களை உள்ளடக்கிய தொழில் வல்லுனர்கள் சங்கத்தில் 32 தொழில்களை பிரதிநிதித்துவப்படுத்தி 52 தொழிற்சங்கங்கள் காணப்படுவதுடன், அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் நிபுணர்களின் உதவியை பெற்றுக் கொடுப்பதற்கு தயாராகவிருப்பதாக இலங்கை தொழில் வல்லுனர்கள் சங்கத்தின் தலைவர் துலித் பெரேரா இதன் போது தெரிவித்தார்.

அமைச்சுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் இணைந்து நாட்டின் பொருளாதாம் மற்றும் அபிவிருத்திக்காக செயற்படுமாறு கேட்டுக்கொண்ட பிரதமர், நிபுணர்களாக நாட்டிற்காக மேற்கொண்ட உதவிகளுக்கு பாராட்டும் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலத்திற்காக ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் பெற்றுக்கொடுக்கக் 06

# இயல்பு நிலைக்கு திரும்பியது நுரைச்சோலை மின் நிலையம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

செயலிழந்திருந்த நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தி செயற்பாடுகள் நேற்று முதல் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதாக மின்சார சபை தெரிவித்தது.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன் செயலிழந்த மின்பிறப்பாக்கி திருத்தப்பட்டுள்ளதுடன் அதன்மூலம் நேற்றிலிருந்து தேசிய மின் கட்டமைப்புக்கு 100 மெகாவோட் மின்சாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

270 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின்பிறப்பாக்கி கடந்த 31ஆம் திகதி திருத்தப்பட்டு 06

# சட்டவிரோத இரவுநேர விடுதி சுற்றிவளைப்பு ; 13 பேர் கைது

கொழும்பு, கொள்ளுபிட்டியில் அனுமதிப்பத்திரமின்றி நடத்தப்பட்டு வந்த இரவு நேர களியாட்ட விடுதியொன்று சுற்றிவளைக்கப்பட்டதில் 12 வெளிநாட்டவர் உட்பட 13 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இக் களியாட்ட விடுதிக்குள் காணப்பட்ட அனுமதிப்பத்திரமற்ற 483 பியர் போத்தல்கள், 06 வைன் போத்தல்கள், உள்நாட்டு மதுபான போத்தல்கள் மற்றும் சட்ட விரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 100 சிகரெட்டுக்கள் என்பனவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

களியாட்ட விடுதியை வெளிநாட்டு பெண்ணொருவரே நடத்தி வந்துள்ளார். இவர் நேற்று முன்தினம் கோட்டை நீதவான் 06

# குருநாகலில் புதிய மூன்று மாடி பிரதேச சபை கட்டடம் திறப்பு

### நிதி அமைச்சர் பசில் பிரதம அதிதி



குருநாகல் நகரில் புதிய மூன்று மாடி பிரதேச சபைக் கட்டடத்தின் திறப்பு விழா நேற்று (02) நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மாகாண சபைகள் அமைச்சின் புரநெகும திட்டம் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிதியை பயன்படுத்தி இந்த புதிய மூன்று மாடி பிரதேச சபை கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்காக 215 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. புதிய கட்டடத்திற்கான அடிக்கல் 2019 இன் பிற்பகுதியில் நாட்டப்பட்டது. இரண்டு ஆண்டுகளில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்துக்கமைவாக உள்ளூராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த புதிய மூன்று மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

புதிய பிரதேச சபைக் கட்டடத்தின் கீழ் மாடியில் காசாளர், பொதுச் சுகாதார அலுவலகம், களஞ்சிய சாலை காப்பகம், உணவகம் மற்றும் உடற்பயிற்சி நிலையம் என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளன. முதல் மாடியில் தொழில்நுட்பப் பிரிவு, நிறுவனப் பிரிவு, சமூக மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பிரிவு, வருவாய் மேம்பாட்டுப் 06

# 21 மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை

### முன்னெடுக்குமாறு ஸ்டாலின் கடிதம்



இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அத்துடன், இந்திய மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையே நிலவும் நீண்டகாலப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க, உறுதியான வழிமுறைகளைப் பின்பற்றப்பட வேண்டும் எனவும் தமிழக முதல்வர் குறித்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து நேற்று முன்தினம் 12 மீனவர்கள் நாகப்பட்டினத்திலிருந்து தென்கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

அதேபோன்று, காரைக்கால், புதுச்சேரியைச் சேர்ந்த மற்றுமொரு மீன்பிடிப் படகில் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 மீனவர்களும், புதுச்சேரியைச் சேர்ந்த 3 மீனவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற 3 சம்பவங்களில், 68 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, தமிழக மற்றும் மத்திய அரசு மேற்கொண்ட முயற்சியால் அவர்கள் தாயகம் திரும்பக் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில், தமிழக மீனவர்கள் மீண்டும் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம், மீனவ மக்களிடையே அச்சத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கைச் சிறைகளில் உள்ள இந்திய மீனவர்கள் நீண்ட காலமாக சிறையில் அடைக்கப்படுவது, மீனவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் துயரத்திற்கு ஆளாக்குவதோடு, அக்குடும்பங்களை வறுமையில் தள்ளுகிறது.

எனவே, இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு இந்தியா மற்றும் 06

உத்தரவாத விலைக்கு நெல் :

# அரசாங்கத்தின் கொள்வனவு வேலைத்திட்டம் ஆரம்பம்

### நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உத்தரவாத விலைக்கு நெல் கொள்வனவு செய்யும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் முதற்கட்டமாக பொலன்னறுவையில் நெல் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும். நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

இம்முறை பெரும்போக அறுவடை நெல்லை அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு பெற்றுக் கொள்ள உள்ளது. அதற்கிணங்க நாடு ஒரு கிலோ 92 ரூபாவாகவும் சம்பா ஒருகிலோ 94 ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அதேவேளை கீரி சம்பா நெல் ஒரு கிலோவை 97 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த சபையின் பொலன்னறுவை மாவட்டத்திற்கான முகாமையாளர் நிமல் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இம்முறை பெரும் போகத்தில் பொலநறுவை மாவட்டத்தின் விவசாயிகளிடமிருந்து 50,000 மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

வாழ்க்கை செலவு அதிகரிப்பு

# தனியார் துறையினருக்கும் 5,000 ரூபாவை வழங்கவும்

### ஊழியர் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் 5,000 ரூபா கொடுப்பனவை தனியார் துறையினருக்கும் வழங்குவதற்கு அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டுமென கோரி நிறுவனங்களுக்கிடையிலான ஊழியர் சங்கம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் கருத்திற் கொண்டு இந்த விடயத்தை பரிசீலிக்குமாறு ஒன்றியம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் போது ஒட்டுமொத்த தொழிலாளர் வர்க்கமும் நன்மைகளைப் பெற வேண்டுமென்றும், தனியார் துறை ஊழியர்களுக்கும் 5,000 ரூபா வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பென்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

நாட்டில் உற்பத்தி செயல்முறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் 80% தனியார்துறை உள்ளடக்கியதென நிறுவனங்களுக்கிடையேயான ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 60 வீதமானவர்கள் 25,000 ரூபாவுக்கும் குறைவாகவே வருமானத்தை 06

# தனியாரிடமிருந்து மின்சாரம் பெற அரசாங்கம் நடவடிக்கை

### – மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே



சூரிய மற்றும் காற்றாலை மின்சாரத்தை தனியாரிடம் இருந்து பெறுவதற்கு மின்சக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த திட்டத்திற்காக 50க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வருவதாக, மின்சக்தி அமைச்சரான காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் ஊடாக அடுத்த வருடத்திற்குள் 1000 மெகாவோட் சூரிய மற்றும் காற்றாலை மின்சாரம் தனியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் என அமைச்சர் லொக்குகே தெரிவித்துள்ளார். ஏற்கனவே பெறப்பட்ட 45 மெகாவாட் சூரியசக்தி மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்பில் ஒருங்கிணைக்க இலங்கை மின்சார சபை பொறியியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் அவர் ,தெரிவித்தார்.

ஆறு மாத காலத்திற்கு தனியாரிடம் இருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெப்ரவரி முதல் ஏப்ரல் வரையிலான மாதங்களில் மழை குறைவதால் நாட்டில் நீர்மின் உற்பத்தி மட்டுப்படுத்தப்படும். 06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் தை மாதம் 21ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஆகிறா பிறை 30

### குறள் தரும் சிந்தனை



குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் சுட்டே தெளிவு

குற்றமற்றவனாகவும், பழிச்செயல் புரிந்திட அஞ்சி நாணுகின்றவனாகவும் இருப்பவனையே உயர்குடியில் பிறந்தவன் எனத் தெளிவு கொள்ள வேண்டும்.

# நல்லிணக்க கலந்துரையாடல்கள் மூலமே பிரச்சினைகளுக்கு தீர்வு

மக்கள் மத்தியில் இனம், மதம், மொழி, பிரதேசம், நிறம் என்றபடி வேறுபாடுகள் காணப்பட்டாலும் மனிதர்கள் என்ற அடிப்படையில் எல்லோரும் நல்லிணக்கத்துடனும் ஒற்றுமையுடனும் வாழ்வதும் செயற்படுவதும் அவசியம். அவ்வாறான ஒற்றுமை, புரிந்துணர்வின் ஊடாக நல்லிணக்கம் உருவாகும் போது உலகிலுள்ள பெரும்பாலான பிரச்சினைகள் தானாவே நீங்கி விடும். அதுவே சமூகவியல் அறிஞர்களின் கருத்தாகும்.

அதேநேரம் பல்லின மக்கள் வாழும் நாடொன்றின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கமும் புரிந்துணர்வும் இன்றியமையாதவை.

இந்த நிலையில் இந்நாட்டில் நல்லிணக்கத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதில் அரசாங்கம் கரிசனை கொண்டுள்ளது. அந்த வகையில் தற்போது நாட்டில் நிலவும் அரசியல் ரீதியிலான பிரச்சினைகளுக்கு உள்நாட்டிலேயே தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் தமிழ், முஸ்லிம் கட்சிகளை சந்தித்து கலந்துரையாடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வடமாகாணத்திற்கு அண்மையில் சென்றிருந்த நீதியமைச்சர் அலி சப்ரி, இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பும் வடக்கு கிழக்கிலுள்ள ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகளும் மலையகக் கட்சிகளும் முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கின்றார்.

இது உண்மையில் பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய அழைப்பாகும். பிரச்சினைகள் நீடிப்பது நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மைகள் பயக்காது. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம்தான் மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். அது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைகள் பயக்கும். அதனால் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நாட்டின் தலைவரான ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாட முடியும். அதற்கு எந்தத் தடையும் இல்லை.

அதன் காரணத்தினால்தான் யாழ்குடாநாட்டுக்கு கடந்த வாரம் செய்திருந்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், 'தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சந்திக்கும் விடயத்தில் ஜனாதிபதி அக்கறையுடன் இருக்கின்றார்' என்று குறிப்பிட்டுள்ளார். நாட்டை உண்மையாக நேசிக்கும் தலைவரின் பண்பே அதுவாகும். 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அவ்வெற்றியை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வைபவத்திலும், ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வைபவத்திலும் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 'ஜனாதிபதித் தேர்தலில் எனக்கு வாக்களித்த மக்களுக்கு மாத்திரமல்லாமல் வாக்களிக்காத மக்களுக்கும் நானே ஜனாதிபதி. அதற்கு ஏறபவே நான் பணியாற்றுவேன்' என்றார்.

அதனால் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடுவதற்கும் அப்பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் ஜனநாயக நாட்டில் எல்லா கட்சிகளுக்கும் உரிமை உள்ளது. அந்த வகையில் இந்நாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றாகும். தமிழ் மக்களின் பிரச்சினைகள், எதிர்பார்ப்புகள் குறித்து அவர்களும் ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாட முடியும். அதற்கு அவர்களுக்கு உரிமை உள்ளது. இதற்கு எவ்வித தடையும் இல்லை.

இந்த சூ ழலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சரவை இணைப் பேச்சாளர் டொக்டர் ரமேஷ் பத்திரன, 'நீண்ட காலமாகத் தீர்க்கப்படாத சில பிரச்சினைகள் இருப்பதை நாம் ஏற்கின்றோம். அவற்றைப் பேசித் தீர்க்க வேண்டும் என்பதில் ஜனாதிபதியும் அரசாங்கத்தினரும் வெளிப்படையான போக்குடன் உள்ளனர். நல்லிணக்கத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கும்' என்றுள்ளார்.

கலந்துரையாடல்கள் மூலம்தான் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அவை உறுதியான முன்னேற்றத்தையும் சுபீட்சத்தையும் நாட்டில் ஏற்படுத்த வழிவகுக்கும். அதனைக் கருத்தில் கொண்டு நாட்டின் மீதும் மக்கள் மீதும் உண்மையான அன்பு கொண்டவர்கள் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கே முன்னுரிமை அளித்து செயற்படுவர். இதைவிடுத்து பிரச்சினைகள் நீடிப்பதை வைத்து கட்சி அரசியல் இலாபம் பெற்றுக் கொள்ள முயற்சி செய்ய மாட்டார்கள்.

ஆகவே கலந்துரையாடல்கள் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நல்லிணக்கத்திற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும் அரசாங்கத்திற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அதன் நிமித்தம் தற்போதைய சூழலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# அதிகரிக்கும் இணையவழி குற்றங்களில் அகப்படாமல் அவதானம் பேணுவோம்!

நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் பயனை இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இதன் விளைவுதான் இன்று எம்மில் பலரை அடிமை நிலைக்கு உட்படுத்திக் கொண்டிருக்கிறது. உலகம் உள்ளங்கைக்குள் ஆட்பட்டு விட்டது என்று சொல்வது போல் ஐந்து கைவிரல்களின் நடுவே ஆறாவது விரலாய் கைத்தொலைபேசிகள் மாறி உள்ளன எனலாம்.



இன்று நாம் இருந்த இடத்தில் இருந்து உலகின் மூலைமுடுக்குகளில் உள்ள அனைவருடனும் தொடர்பு கொள்வதோடு தகவல் பரிமாற்றமும் இடம்பெறுகிறது. அத்தோடு தமது உற்பத்திகள் வியாபார பொருட்களை விளம்பரப்படுத்த விற்பனை செய்ய பொழுது போக்க தகவல் பெற என பல தேவைக்கு இன்று இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். பல்வேறு இலத்திரனியல் உபகரணங்களான கணினிகள். மடிக்கணனிகள் டெப் மூலம் இணையத்தைப் பயன்படுத்தினாலும் ஒப்பீட்டு அளவில் இணையப்பயன்பாடு கைத்தொலைபேசி மூலமே கூடுதலாக இடம்பெறுகிறது. இன்று கைத்தொலைபேசிகள் மலிவான விலைகளில் பல வகைகளில் இலகுவாக கிடைப்பதே இதற்கு காரணம் எனலாம்.

உலக சனத்தொகையான 7.83 பில்லியனில் 5.22 பில்லியன் மக்கள் கைத்தொலைபேசியை பாவிக்கின்றனர். இது 56.4% ஆக காணப்படுகின்றது. இது உலக சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் 66.6% ஆகும். 64% ஆண்களும் 36% பெண்களுமாக காணப்படுகின்றனர். இவர்கள் தமது பொழுதைப் போக்கவும் தமக்கு தேவையான தகவல்களை பெறவும் தொடர்புகளை பலப்படுத்தவும் சமூக வலைத்தளங்களை பின்தொடரவும் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறாக இணையத்தளத்தை பயன்படுத்தும் போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். அதாவது தகவல்கள் திருடப்படுதல், இணையவழி குற்றச் செயல்களில் ஈடுபடல், நிதி மோசடி என்பவவைகளுக்கு ஆட்பட நேரிடும். இதுவே இணையவழி குற்றம் (Cyber Crime) எனப்படுகிறது. இத்தகையை இணையவழி குற்றமானது 1910 களிலே முதன் முதலில் ஏற்பட்டது. ஜோசப் மேரி ஜெக்கு ஆட் என்பவரால் பிரான்ஸ் நாட்டு கைத்தறி சம்பந்தமான தகவல்களை திருடியதில் இருந்து இணையவழி குற்றம் ஆரம்பித்தது.

உலகில் இணையத்தளக் குற்றத்தில் ஈடுபடும் முதல் 20 நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதல் இடத்தில் உள்ளது. சீனா இரண்டாம் இடத்திலும் இறுதி 20 ஆம் இடத்தில் இஸ்ரேலும் உள்ளன. அமெரிக்காவில் 25% உம் சீனாவில் 9% உம் காணப்படுகின்றன. இந்தியாவில் மட்டும் சுமார் 42 மில்லியன் மக்கள் இணையத்தள குற்றத்திற்கு ஆட்பட்டுள்ளனர். இவ்வாறான குற்றங்களில் தரவுகள் திருடப்படல், தகவல்களை அவரது அனுமதி இன்றி முடக்குதல், பண மோசடி என்பன அடங்கும். இது இருவகையில் இடம்பெறலாம்.

01. சமூக தேவைக்காக அரசு மற்றும் நலன்விரும்பிகள் முடக்குவது (Ethical Hacking)
02. தனிப்பட்ட தேவைக்காக முடக்குவது (illegal hacking)

இவ்வாறான முடக்கங்கள் சமூக நலன் சார்ந்து இடம்பெறும் போது பல்வேறு வகையிலான சமூக குற்றங்கள், இனமோதல்கள் திருட்டு சம்பவங்கள் என்பன தடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் தனிப்பட்ட ரீதியில் முடக்குவது சட்டவிரோதமாகும். இவ்வாறான திருட்டில் பின்வருவன அடங்கும்.

தகவல் தொழில்நுட்ப சேவைகளை திருடுவது, தகவல்களை அழிப்பது, இணையத்தில் முகம் தெரியாதவர்களை ஏமாற்றுவது, கணிணி உட்பட தொழில்நுட்ப சாதனங்களில் இருந்து தகவல்களை திருடுவது, மற்றவர்களின் தகவல்களையோ புகைப்படங்களையோ தவறாக பயன்படுத்துவது, சட்டத்திற்கு புறம்பான பாலியல் குற்றங்களை இணையம் மூலம் ஏற்படுத்துவது, மின்னஞ்சல் மற்றும் இணைய அழைப்பு மூலம் கொலை மிரட்டல்கள் இடம்பெறுவது, மற்றவர்களின் மின்னஞ்ஞல் மற்றும் சமூக வலைத்தள கணக்குகளை திருடி அவதூறு பரப்புவது, முகப்புத்தகத்தில் போலியான படங்களைப் பேட்டு மானபங்கப்படுத்தல், வைரஸ் மென்பொருளை பயன்படுத்தி கணணி உபகரணங்கள சீர்குலைத்தல் என பலவகையில் அடங்கும்

இன்றைய காலத்தில் இவ்வாறான இணையவழி குற்றங்கள் மூலம் அதிகம் பாதிக்கப்படுவது சிறுவர்களும் பெண்களுமாக காணப்படுகின்றனர். தமது அன்புக்குரியவர்களை நம்பி ஏமாந்து போகின்றனர். இவ்வாறான குற்றங்களுக்கு தமது அன்புக்குரியவர்களிடம் நம்பி ஏமாறுவதே காரணமாக உள்ளது. தாம் மகிழ்ச்சியாக இருக்கையில் உள்ள உரையாடல்கள் புகைப்படங்கள் குரல் பதிவுகள் என்பவற்றை கைப்பேசிகளில் பத்திரப்படுத்தி வைத்துள்ளனர்.

தமது கைப்பேசிகள் பழுதடைந்ததும் கடைகளில் திருத்தக் கொடுப்பதால் அதில் உள்ள தகவல்கள் சில சமயங்களில் களவாடப்பட்டு இணையத்தளங்களில் வெளியிடப்பட்டுகின்றன. இதன் காரணமாக இன்று எமது சமூகத்தில் தற்கொலைகளும் குடும்ப முரண்பாடுகளும் அதிகரித்துள்ளன. இது மாத்திரமன்றி அண்மைக் காலமாக நிகழ்நிலை கல்வி முறை ஊடாக மாணவர்கள் பயன் பெற்ற போதும் முகநூல் மற்றும் போலியான நபர்களின் தொலைபேசி மூலம் தொடர்புகளை மேற்கொண்டு தமது எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியவர்களே அதிகம் எனலாம். இதற்கு எமது நாட்டில் உள்ள வைத்தியசாலைகளின் உளநல பிரிவு மருத்துவ விடுதிகளில் சிகிச்சைக்காக வரும் அளவுகள் சான்று பகர்கின்றன.

எமது நாட்டில் இவ்வாறான குற்றச் செயல்களை கண்காணிக்க 2006 இல் CERT அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம் பெறும் அதேவேளை முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படுகின்றன. இதன் மூலமும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் இவ்வாறான. செயற்பாடுகளில் இருந்து விலகி இருப்பது தமது எதிர்காலத்திற்கு உகந்தது என்பதே உண்மையாகும்.



ஏ.எம்.கஸ்பியா வீவி (பீ.ஏ)...
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் பிரதேச செயலகம் கல்முனை.

# அக்கரைப்பற்றில் களைகட்டிய வடக்கு, கிழக்கு கலைஞர்களின் இருநாள் புகைப்பட கண்காட்சி





Club Photo Ceylonica வின் ஏற்பாட்டில் இருநாள் புகைப்படக் கண்காட்சி மற்றும் வடக்கு, கிழக்கு மாகாண புகைப்படக் கலைஞர்களுக்கான விருது வழங்கல் விழா நிகழ்வுகள் அக்கரைப்பற்று மாநகர 'ஹல்லாஜ்' மண்டபத்தில் நடைபெற்றன.

Club Photo Ceylonica தலைவரும் வைத்தியருமான ஆகில் அஹ்மட் ஷரிபுதீன் மற்றும் புகைப்படக் கலைஞரும் விழா ஏற்பாட்டாளருமான அப்துல் ஹமீட் தாஹிர் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற புகைப்படக் கண்காட்சியை அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லாஹ் அகமட் சகி பிரதம அதிதியாக கலந்து கொண்டு அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.



இரண்டாம் நாள், இறுதி பரிசளிப்பு நிகழ்வுகளில் தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். Club Photo Ceylonica ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரபல புகைப்படக் கலைஞர்களின் புகைப்படங்கள் மற்றும் கடந்த 2020, 2021 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெற்ற புகைப்படக் கலைஞர்களின் புகைப்படங்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டதுடன், வெற்றி பெற்ற புகைப்படக் கலைஞர்கள் விருது வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

தொன்மை, கலாசாரம், பண்பாடு, சமயம், வாழ்வியல், இயற்கை, இரசனைகள் உள்ளிட்ட துறைகளில் தத்ரூபமான புகைப்படங்களைக் கொண்டு கண்காட்சிக் கூடம் களைகட்டியது. இருநாள் புகைப்படக் கண்காட்சியை பெருமளவிலானோர் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. வெற்றியீட்டிய கலைஞர்கள் விருது வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். இதில் Grand Award விருது அக்கரைப்பற்று முனவ்வரா கனிஷ்ட கல்லூரி மாணவன் எம்.எஸ்.அதீப் அஹமட்டுக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன, Club Photo Ceylonica இன் அங்கீகார விருது வத்தளை அமலினி டி செய்றாஹுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

அம்பாறை மேலதிக மாவட்டச் செயலாளர் வி.ஜெகதீஸன், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எஸ். நவநீதன், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார், அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், FNPIAS சர்வதேச விருது வெற்றியாளர் ஹர்ஷ மதுரங்க ஜெயசேகர, போட்டோஹப்பின் தலைவர் பிரவீன் சமரக்கோன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டொக்டர் எஸ்.ஜெய்சங்கர், அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.றிஸ்வான், மாவட்ட உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.ஏ.தீன் முகம்மட், எழுத்தாளர் உமாவரதராஜன், படத் தாயாரிப்பாளரும், எழுத்தாளருமான ஹசீன் ஆதம் என முக்கியஸ்த்தர்கள் பலர் கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# நெதர்லாந்தின் FMO இடமிருந்து நீண்ட கால நிதி வசதிகளுக்காக 10 மில். டொலர் பெற்றுள்ள Alliance Finance நிறுவனம்

இலங்கையின் மிகப் பழைமையான நிதி நிறுவனமான அலையன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி (Alliance Finance Company PLC AFC), MSME வணிகத்தின் வளர்ந்து வரும் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்காக நீண்ட கால அடிப்படையிலான 10 மில்லியன் டொலர் நிதியளிப்பு வசதியின் ஒரு பகுதியாக, டச்சு தொழில் முனைவோர் மேம்பாட்டு வங்கியான FMO யிடருந்து 5 மில்லியன் டொலரை இரண்டாவது கட்ட தொகையாக பெற்றுள்ளது.

2020 இன் பிற்பகுதியில் 2021 இன் முற்பகுதியில் டச்சு தொழில்முனைவோர் மேம்பாட்டு வங்கியான FMO இடமிருந்து 10 மில்லியன் அமெரிக்க டொலர் வசதியைப் பெற்ற AFC இல் முதல் தவணையாக 5 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றது. 6.3 பில்லியன் யூரோ பெறுமதியான பல்வேறு முதலீட்டு பிரிவுகளுடன், FMO ஆனது 85 நாடுகளில் முதலீடுகளைக் கொண்ட மிகப் பெரிய ஐரோப்பிய இருதரப்பு தனியார் துறை அபிவிருத்தி வங்கிகளில் ஒன்றாகும்.

பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் கருதப்படும் நாட்டின் MSME துறைக்கும் இந்த நிதியுதவிகள் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு காரணமாக அமைகின்றன. AFC இன் பிரதித் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ரோமானி டி சில்வா இது குறித்து தெரிவிக்கையில், "AFC இன் MSME மையப்படுத்தப்பட்ட வணிக மூலோபாயத்திற்கு இது ஒரு முக்கியமான மைல்கல் என்பதுடன், எமது MSME திட்டங்களில் FMO இன் கூட்டாண்மை காரணமாக நாம் ஊக்கமும் உற்சாகமும் அடைந்துள்ளோம். நாட்டில் MSME துறையை மேம்படுத்துவது தொடர்பில் AFCFMO கூட்டாண்மையானது AFC இன் வளர்ந்து வரும் சர்வதேச நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துகிறது.

கடந்த ஆண்டு AFC ஆனது, ஜேர்மனியின் சர்வதேச நிலைபேறுத் தன்மை தரநிலைகள் மதிப்பு சார்ந்த நிதி நிறுவனங்கள் (International Council of Sustainability Standards for ValueDriven Financial Institutions ICSSVDFI) அமைப்பின் கீழ் நிர்வகிக்கப்படும் வங்கி மற்றும் நிதித் துறையில் முழுமையான நிலைபேறான தன்மைக்காக, தெற்காசியாவில் முதலாவது சான்றளிக்கப்பட்ட நிதி நிறுவனமாக தெரிவானது. 2018 ஆம் ஆண்டில் இதேபோன்ற வசதியுடன் AFC இற்கு FMO உதவியுள்ளதால், FMO இற்கு இது புதிய விடயமல்ல. இந்த வசதியானது, 5 ஆண்டுகளுக்கான நிலையான வட்டி வீதத்தை கொண்டுள்ளது.

இதன் மூலம் AFC அதன் இருப்புநிலைக் குறிப்பில் (balance sheet), சொத்து மற்றும் பொறுப்பை உரிய வகையில் சமனிலையில் காண்பிக்கும் வகையில் நிர்வகிக்க உதவுகிறது. அத்தகைய உலகளாவிய உயர்ந்த நிதி வசதிகளை AFC உடனடியாகப் பெறுவது, நிலைபேறான நிதியுதவியில் எம்மால் நிரூபிக்கப்பட்டு அவதானம் செலுத்தப்பட்டமை தொடர்பிலான சர்வதேச அங்கீகாரத்தின் சான்றாகும். இது மக்கள், பூமி, இலாபம் ஆகிய மூன்று அடிப்படை விடயங்களில் எமது பாரிய அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாகும்.

# இனமத பேதங்களுக்கு அப்பால் மனிதநேயத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அமைப்பு உதயம்

**மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா போன்ற தலைவர்கள் காட்டிய மனித நேய வழியை நாட்டு மக்கள் மத்தியில் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை சத்திய இலங்கை மனித நேய அமைப்பின் தலைவர் பேராசிரியை சந்திமா விஜேகுணவர்தன வலியுறுத்தியுள்ளார். அண்ணல் காந்தி உட்பட 12 நாட்டுத் தலைவர்களின் பாதையில் இலங்கையில் மனித நேயத்தை வளர்த்தெடுப்பதற்கான அரசியல், இன, மத, மொழி பேதமற்ற ஒன்றிணைப்பாக இந்த பொது அமைப்பு செயற்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.**

பாரிய சிக்கல்களுக்குள் அகப்பட்டுள்ள நூல் பந்தொன்றை அவிழ்க்க வேண்டிய அவலத்துக்குள் நாடு சிக்குண்டுள்ளது. இதனை அவிழ்ப்பது இலகுவான காரியமல்ல. என்றாலும் கட்டாயமாக அதனை செய்தாக வேண்டியுள்ளது. இந்தச் சிக்கலிலிருந்து விடுபட மக்களிடையே மனித நேயத்தைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. இதனை இன, மத, மொழி, கட்சி அரசியல் பேதமின்றி முன்னெடுக்க வேண்டும் என இலங்கை மனித நேய அமைப்பின் இணைப்பாளரும், அழைப்பாளருமான சந்திமா விஜேகுணவர்தன சுட்டிக்காட்டுகிறார்.

"எமது தேசம் சுதந்திரமடைந்து 74 வருடங்களாகின்றன. ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் நாடு இன்னமும் சங்கமிக்கவில்லை. கட்சி அரசியலில் சிக்கி நாடும் மக்களும் அவதிப்பட்டுக் கொண்டிருப்பதையே அவதானிக்க முடிகிறது. இனங்களிடையே ஒற்றுமை வலுப்பெறவில்லை. மனிதநேயம் மறக்கப்பட்டதொன்றாகவே காணப்படுகின்றது. அழகான எமது நாட்டில் என்ன வளமில்லை? சகல வளங்களும் செழித்துக் காணப்படும் நாட்டில் மக்கள் பிளவுபட்டுப் போயுள்ளனர். மதத்தால், இனத்தால், மொழியால், அரசியலால் மோதிக் கொண்டிருக்கின்றோம்.

காலம் கடந்து கொண்டே போகிறது. எமது எதிர்காலச் சந்ததியினர் எம்மைப் பார்த்து சபிக்கும் அவலம் ஏற்பட இடமளிக்கக் கூடாது. மக்களிடையே மனித நேயம் கட்டியெழுப்பப்பட வேண்டும். அனைவரும் மனிதர்கள் என்ற மனநிலை எல்லோரிடமும் ஏற்பட வேண்டும். அதற்கான நிலையான, நீடித்து நிற்கக் கூடிய வேலைத்திட்டத்தை அனைவரும் ஒன்று கூடி முன்னெடுக்க வேண்டும். நாட்டுக்கு தேசியக் கொள்கையொன்று மிக முக்கியமானமாகும். நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசும் தேசியக் கொள்கையொன்றை வகுத்துச் செயற்படவில்லை" எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் பொருட்டு இன, மத, மொழி பேதங்களைக் கடந்து மனிதநேயத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய அமைப்பொன்று உதயமாகியுள்ளது. மக்களிடையே பேதத்தைக் களைந்து வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு உட்பட முழு தேசத்தையும் ஒன்றிணைத்துச் செயற்படும் வகையில் இந்த 'சத்தியத்துக்கான இலங்கை மனித நேயம்' எனும் பெயரிலான அமைப்பு கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை மாலை இந்த அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வை ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும மங்கல விளக்கேற்றி வைத்து ஆரம்பித்து வைத்தார்.

சத்ய ஸ்ரீலங்கா மனித நேயம் என்ற அமைப்பில் முதலாவது கருத்தொடரின் போது கல்வித் துறை தொடர்பில் கல்வியியலாளர் கலாநிதி செயினுலாப்தீன் நஜிமுதீனும், வியாபாரம் மற்றும் வர்த்தகத் துறை குறித்து பேராசிரியர் இசுரு பண்டாரவும் தொழில்துறை தொடர்பில் பொறியியலாளர் அனுராத தென்னக்கூனும், இன ஒருமைப்பாடு தொடர்பில் பேராசியிர் ஜி. ஜி. சமல் சஞ்சீவவும், தேசிய திட்டம் தொடர்பில் அமைப்பின் தலைவர் பேராசிரியர் சந்திமா விஜேகுணவர்தனவும் விளக்கமளித்தனர்.

## நாட்டில் நீடித்து நிலைக்கக் கூடிய ஐக்கியம் கட்டியெழுப்பப்பட வேண்டுமென வலியுறுத்தல்





அண்ணல் மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, ஜவஹர்லால்நேரு, லீகுவான்யூ, யாசிர்அரபாத், டத்தோ மஹதிர் முஹம்மத், இம்ரான் கான் உட்பட 12 உலகத் தலைவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு இவ்வமைப்பு செயற்படுவதாகவும் நாட்டுக்குப் பொருத்தமான தேசியக் கொள்கையொன்றை வகுத்து மக்கள் முன் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் அமைப்பின் செய்பாடுகள் தொடர்பில் நாடு முழுவதிலும் மக்கள் சந்திப்புகளை முன்னெடுக்கவிருப்பதாகவும் கட்சி அரசியல் இன, மத மொழி பேதமின்றி அமைப்பு இணைந்து செயற்படவிருப்பதாகவும் பேராசிரியர் சந்திமா விஜேகுணவர்தன தெரிவித்தார்.

இந்தக் கருத்தாடலை ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரம முன்னெடுத்துச் சென்றார். பாகிஸ்தான், பாலஸ்தீன, சவூதி அரேபிய, பங்களாதேஷ் உட்பட பல்வேறு நாடுகளதும் தூதுவர்கள், உயரதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கலாபூஷணம்
**எம்.ஏ.எம். நிலாம்...✍**

---

# சட்டத்துறையில் பொன்விழா கண்ட சட்டத்தரணி எம்.ஸீ.எம். ஹம்ஸா

**சீனன்கோட்டையின் சிரேஷ்ட சட்டத்தரணி முஹம்மத் கரீம் முஹம்மத் ஹம்ஸா சட்டத்துறையில் ஐந்து தசாப்தங்களை பூர்த்தி செய்துள்ளார். இவரது சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு களுத்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் களுத்துறை மேல்நீதிமன்ற கட்டட வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.**



இவ்விழாவில் உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.டி. சிட்ரசிறி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் களுத்துறை மற்றும் பாணந்துறை நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள், களுத்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர், உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் அவரது சேவையை பாராட்டி நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன. சட்டத்தரணி எம்.ஸீ.எம். ஹம்ஸா தனது ஆரம்பக் கல்வியை ஆங்கில மொழியில் களுத்துறை 'Holy Family Convent' இலும் பின்னர் 5ஆம் ஆண்டு வரை சீனன் கோட்டை ஜூனியர் பாடசாலையிலும் கற்றார். 06ஆம் வகுப்பு முதல் உயர்தரம் வரை கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் கற்று, 1965 ஆம் ஆண்டு கொழும்பு சட்டக் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டார்.

அவர் அங்கு சட்டக்கல்லூரியில் L.L.B பரீட்சையில் சிறப்பு சித்தி பெற்று 1970ஆம் ஆண்டு அன்றைய பிரதம நீதியரசர் எச். என்.ஏ. பெர்னாண்டோ மற்றும் ஏ.சீ.ஏ. அலஸ் முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து சட்டத்தரணியானார்.

அதன் பின் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சிறிது காலம் சட்டத்தரணியாக பணிபுரிந்த இவர், களுத்துறை மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றலாகி இன்று வரை (பொன்விழா கொண்டாடும் வரை) அதே நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பணியாற்றி வருகின்றார்.

அவர் சட்டத்தரணியாக பணியாற்றிக் கொண்டே கொழும்பு பல்கலைக்கழகத்தில் 'சர்வதேச வியாபார சட்டத்தில்' டிப்ளோமாவை (1988) பூர்த்தி செய்தார். தொடர்ந்தும் 50 வருட காலமாக களுத்துறை நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பணி செய்து வருகிறார்.

அவர் தர்கா நகரை பிறப்பிடமாகவும் சீனன்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட முஹம்மத் ஹம்ஸாவின் மைத்துனராவார்.

சீனன்கோட்டை ஜாமிய்யத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட நிர்வாக சபைத் தலைவரும் சீனன் கோட்டை பள்ளிச்சங்கத்தின் உப தலைவருமான சட்டத்தரணி எம். ஸி.எம். ஹம்ஸா, சீனன்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற மர்ஹூம்களான வை.எல்.எம். கரீம், மழீஹா தம்பதிகளின் புதல்வராவார்.

**பேருவளை விசேட நிருபர்...✍**

---

# தொட்டவத்தை வை.எம்.எம்.ஏ பேரவை ஸ்தாபக தலைவரின் முதலாம் நினைவு தினம்

**பாணந்துறை தொட்டவத்தை ரவ்ழதுல் அத்கியா ஜும்ஆப் பள்ளிவாசல் உள்ளிட்ட மூன்று பள்ளிவாசல்களின் முன்னாள் தர்மகர்த்தாவும், அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் தொட்டவத்தை கிளையின் முன்னாள் ஸ்தாபகத் தலைவருமான மர்ஹூம் முஹம்மது அமீர் முஹம்மது ஸாலி அவர்களது மறைவின் முதலாவது நினைவு தினம் நாளை (4.2.2022) ஆகும். நாளை அன்னாரின் ஞாபகார்த்தமாக துஆப் பிரார்த்தனை நிகழ்வு இடம்பெறவுள்ளது.**



பாணந்துறை தொட்டவத்தை அல் பஹ்றியா மத்திய கல்லூரியில் தனது பாடசாலைக் கல்வியை ஆரம்பித்த இவர் கொழும்பு சாஹிரா கல்லூரியில் உயர் கல்வியை நிறைவு செய்தார்.தொட்டவத்தை பள்ளிவாசல்களின் தர்மகர்த்தாவாக பணியாற்ற முன்னர் பள்ளிவாசல் நிர்வாகத்தில் பல பதவிகளிலும் சமூக நல அமைப்புகளிலும் செயலாற்றியுள்ளார். பள்ளிவாசல் மற்றும் நிர்வாகத்துடன் நெருக்கமான செயல்பாடுகள் கொண்ட இவர், சாதுலியா தரீக்கா வழிபாடுகளில் ஆர்வத்துடன் பங்களிப்புச் செய்தவராவார்.

தொட்டவத்தை பள்ளிவாசலின் முன்னாள் தர்மகர்த்தாக்களில் ஒருவரான மர்ஹூம் எம்.எஸ்.எம்.மவ்சூல் அவர்களின் குடும்பத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வேறவத்தை மஸ்ஜிதுல் பத்ர் பள்ளிவாசலை குறிப்பிட்ட பிரதேசத்தில் கட்டியெழுப்பும் விடயத்திலும் இவர் பெரும் பங்களிப்புச் செய்தவராவார். இன்று இப்பள்ளிவாசல் வேறவத்தை கிராம மக்களின் சமய நிகழ்வுகளுக்கு பிரதான இறையில்லமாக திகழ்கின்றது.

இவர் Y.M.M.A தொட்டவத்தை கிளைக்கு நிரந்தரக் கட்டடம் பெற்றுக் கொடுப்பதில் முன்னின்று உழைத்தவராவார். அன்னாரின் குடும்ப உறுப்பினர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் இன்று கல்விப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

பாணந்துறை தொட்டவத்தை 'அந்நுஸ்ரத்' புர்தா கமிட்டியின் தலைவராகவும் செயல்பட்ட இவர்,வாராந்த புர்தா ஓதல் நிகழ்வுகளை சுழற்சி முறையில் உறுப்பினர்களின் வீடுகளில் இடம்பெறச் செய்தார். இளைஞர்களின் இந்த வாராந்த ஒன்றுகூடல் மூலம் பயனுள்ள பல்வேறு விடயங்கள் கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டமை நினைவுகூரத்தக்கது. தொட்டவத்தை வை.எம்.எம்.ஏ கிளையை ஆரம்பித்த முன்னோடிகளில் ஒருவராகவும் இவர் விளங்கியதுடன் இந்த அமைப்பின் முதலாவது தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார். தொட்டவத்தை விளையாட்டுக் கழகத்திலும்(T.S.C) ஆரம்பகால உறுப்பினராக விளங்கிய இவர், இக்கழகத்தின் மேடை நாடகங்களில் நகைச்சுவை பாத்திரத்தில் நடித்துள்ளார்.

பாணந்துறை தொட்டவத்தை பெரிய பள்ளிவாசலின் முன்னாள் தர்மகர்த்தாவான மர்ஹூம் முஹம்மது ஹாஜியார் முஹம்மது அமீர் மற்றும் உம்முல் இனாயா தம்பதிகளின் புதல்வரான இவர் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி தொட்டவத்தை பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்ற நிர்வாகக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் பள்ளிவாசலிருந்து பேருவளையில் நிகழ்வொன்றுக்கு சென்ற சமயம் ளுஹர் தொழுகைக்கு தயாரான நிலையில் துணைவியாரின் பேருவளை இல்லத்தில் காலமானார்.அன்னாரின் ஜனாஸா இலங்கையின் முதலாவதும் பழமைமிகு பள்ளிவாசல் எனவும் புகழ்பெற்ற பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...✍**
(பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)

---

# ரூபா 50 ஆயிரம்பரிசு பெறும் இலங்கை எழுத்தாளர்கள்









அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கம் இலங்கை எழுத்தாளர்களுக்காக நடத்திய இலக்கியப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக அவுஸ்திரேலியாவில் இயங்கி வரும் தமிழ் இலக்கிய கலைச்சங்கம், இலங்கை தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் கடந்த 2019 – 2020 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் வெளியான நூல்களில் சிறந்தவற்றை தேர்வு செய்து, அவற்றை எழுதியவர்களுக்கு பரிசு வழங்கத் தீர்மானித்திருந்தது.

இந்தத் தீர்மானத்திற்கு அமைவாக குறிப்பிட்ட இரண்டு ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் வெளியான சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு முதலான ஐந்து துறைகளில் வெளியான நூல்கள், அவற்றை எழுதிய எழுத்தாளர்களிடமிருந்து கோரப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் இறுதிக் கட்டத் தேர்வில் சிறந்த நூலாக தெரிவானவற்றுக்கு பரிசில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்புத் துறையில் ஒரே ஒரு நூலே போட்டிக்கு வந்தமையால், இனிவரும் ஆண்டுகளில் நடத்தவிருக்கும் போட்டியில் அதனை பரிசீலிப்பது என முடிவாகியிருக்கிறது.

**மறைந்த ஈழத்து இலக்கிய ஆளுமைகளின் நினைவாக வழங்கப்படுகிறது**

போட்டி முடிவுகளும் பரிசுத் தொகையும் வருமாறு:

கே. ஆர். டேவிட் சிறுகதைகள் (சிறுகதை)_கே. ஆர் . டேவிட் எழுதியது _ரூபா ஐம்பதாயிரம், குஞ்சரம் ஊர்ந்தோர் (நாவல்) ரூபா ஐம்பதாயிரம், சீமான் பத்திநாதன் பர்ணாந்து எழுதியது, மைவண்ணன் இராம காவியம் – (கவிதை) ரூபா ஐம்பதாயிரம், காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன் எழுதியது,குன்றிலிருந்து கோட்டைக்கு (கட்டுரை) ரூபா ஐம்பதாயிரம், எம். வாமதேவன் எழுதியது.

பரிசு பெற்றவர்களுக்கான பரிசுத் தொகையும் சான்றிதழ்களும், 2022 ஏப்ரல் மாதத்திற்கு முன்பாக அனுப்பி வைக்கப்படும். பரிசுத் தொகை – இலங்கை நாணயத்தில் தலா 50 ஆயிரம் ரூபா.

குறிப்பிட்ட பரிசுத் தொகைகளை வழங்க முன்வந்துள்ளவர்கள்:

நா. அருணகிரி (மெல்பன்)_எழுத்தாளர் (அமரர்) அருண் விஜயராணி நினைவுப்பரிசு, முகம்மது ஆரீஃப் (சிட்னி)_ எழுத்தாளர் அமரர் மருதூர்க்கொத்தன் நினைவுப்பரிசு, மருத்துவர் (திருமதி) வஜ்னா ரஃபீக் (மெல்பன்)

_எழுத்தாளர் (அமரர்) மருதூர்க்கனி நினைவுப்பரிசு, மருத்துவர் நொயல் நடேசன் (மெல்பன்) _ எழுத்தாளர் (அமரர்) மல்லிகை ஜீவா நினைவுப்பரிசு .

(தகவல்: அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம்)

# வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் இருவர் விமான நிலையத்தில் கைது



சட்டவிரோதமாக சுமார் 11 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களை கடத்த முயன்ற இருவர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்றுக் காலை டுபாய் புறப்பட்ட வேளையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினர் நடத்திய விசாரணைகளை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் போது, அவர்களது பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 46,000 யூரோ நாணயத்தாள்கள் இதன் போது சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### கொரோனா அச்சுறுத்தல் தீவிரம்:

# கர்ப்பிணி தாய்மாருக்கு சுகாதார தரப்பு எச்சரிக்கை

## பூஸ்டர் தடுப்பூசியை ஏற்ற அறிவுரை

கொரோனா தொற்றுக்குள்ளாகிய 500 கர்ப்பிணிப் பெண்கள் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒமிக்ரோன் வைரஸ் தொற்றினால், இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக குடும்பநல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர், வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

கர்ப்பிணித் தாய்மார்கள் இயலுமானவரை விரைவாக பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், சன நெரிசல் அதிகமுள்ள இடங்கள் மற்றும் அநாவசியமான பயணங்களைத் தவிர்க்குமாறு கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வைத்தியர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

# அனுரவின் வாகனம் மீது முட்டைத் தாக்குதல் ஜே.வி.பி. நேற்று பொலிஸில் முறைப்பாடு!

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பயணித்த வாகனம் மீது, முட்டைத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக ஜே.வி.பி. நேற்று (02) பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளது.

கம்பஹா கலகெடிஹேன பகுதியில் அண்மையில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாநாட்டில் பங்கேற்கச் சென்ற கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பயணித்த வாகனம் மீது முட்டைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாகவே உரிய விசாரணை நடத்தி, சந்தேகநபர்களைக் கைது செய்யுமாறு கோரி, இவ்வாறு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 18 வயதுக்கு மேற்பட்ட... (03 ஆம் பக்கத் தொடர்)

துணைப் பட்டியல்கள், தேர்தல் செல்லுபடியாகும் வாக்காளர் பதிவேட்டில் சேர்க்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை 18 வயது பூர்த்தியாகும் அனைவருக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின்படி விரைவில் வாக்களிக்கும் வாய்ப்பை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வருடம் முதல் 18 வயது பூர்த்தியானவர்கள் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களுக்குச் செல்லாமல்

ஒன்லைனில் பதிவு செய்ய முடியுமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## தெங்கு அபிவிருத்தி... (03 ஆம் பக்கத் தொடர்)

அதுவரை அரச சொத்தை முறையற்ற விதத்தில் பாவித்து அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியது தொடர்பாக நிறுவன சட்ட விதி முறைகளுக்கமைய உடனடியாக செயல்படும் வகையில் குறிப்பிட்ட சாரதி தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணை நடவடிக்கைகளை மேற் கொள்ளப்பட்டு வருவதோடு அத்தகவல்கள் எதிர்காலத்தில் அறியத் தர நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மேலும் இச்சம்பவம் தொடர்பாக கவலை தெரிவிப்பதாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தலைவர் கீர்த்தி வீரசிங்க தெரிவித்துள்ளார்.

## நாட்டின் அபிவிருத்தி... (03 ஆம் பக்கத் தொடர்)

கூடிய ஒத்துழைப்பை தொழில் வல்லுனர்கள் சங்கத்திற்கும் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இச் சந்தர்ப்பத்தில் பிரதமரின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன, பிரதமரின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் அனுராதா ஹேரத், இலங்கை தொழில் வல்லுனர்கள் சங்கத்தின் தலைவர் துலித் பெரேரா, ருச்சிரா குணசேக்கர, உபாலி ஜயவர்தன, பந்துல பத்மசிறி, சாந்த செனரத், எச்.பீ.ஆர்.கே.ரூபசிங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சுதந்திர தினத்தன்று மதுபான, இறைச்சி...

மதுபானசாலைகள் மற்றும் இறைச்சி கடைகள் பெப்ரவரி 4 ஆம் திகதி மூடப்படும் என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

அன்றைய தினத்தில் இறைச்சிக் கூடங்களை மூடுமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் என்.எச்.எம்.சித்ரானந்தா பணிப்புரை விடுத்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்றைய தினத்தில் நாடளாவிய ரீதியில் உள்ள மதுபான சாலைகளும் மேலதிகமாக அனுமதி பெற்ற ஏனைய அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்பட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## மின்சார சபைக்கு தொடர்ந்து...

அது தொடர்பில் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் நேற்று தெரிவித்தார்.

அதற்கிணங்க எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மின்சார விநியோக துண்டிப்பை மேற்கொள்வதற்கான எந்த காரணமும் கிடையாது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பராமரிப்பு நடவடிக்கைகள் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த களனி திஸ்ஸ தனியார் மின் உற்பத்தி நிலையத்தின் நடவடிக்கைகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதன் மூலம் 165 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## நாடு முடக்கத்திற்கு...

விடுத்துள்ளார்.

கொவிட் கட்டுப்பாட்டுக்கு அரசாங்கமும் பொறுப்புடைய தரப்பினரும் உடன் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அவ்வாறு அல்லாத பட்சத்தில் நாட்டை முடக்க வேண்டிய சூழ்நிலை கூட ஏற்படலாம்.

சுகாதார வழிகாட்டி ஒன்று இருக்கிறதே தவிர, அது அரச மற்றும் தனியார்த் துறையினரால் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை.

மக்கள் இந்த விடயத்தில் இருக்கின்ற அபாய நிலையைப் புரிந்து கொள்ளாமல் செயற்படுகின்றனர்.

மக்களுக்கான சுகாதார அமைச்சு போதிய விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்கும்...

வந்தபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணிக்கு பிணை வழங்க புத்தளம் மேல் நீதிமன்றம் கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி மறுப்பு வெளியிட்டது.

2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 அன்று, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கைது செய்யப்பட்டார்.

ஈஸ்டர் தாக்குதலை நடத்தியவர்களுக்கு அவர் உதவி செய்தார் என்றும் சமூகங்களுக்கிடையில் அமைதியின்மையைத் தோற்றுவித்ததாகவும் தெரிவித்து அவர் கைது செய்யப்பட்டார்.

## கிராண்பாஸில் போதைப்பொருள்...

கொழும்பு, கிராண்ட்பாஸ் மஹவத்தை வீதியில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 3 கிலோ 926 கிராம் ஹசிஸ் போதைப்பொருளைக் கைப்பற்றியுள்ளனர்.

வீடு ஒன்றில் பங்கர் அமைக்கப்பட்டு இந்தப் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே கைப்பற்றப்பட்டது.

இந்தச் சுற்றிவளைப்பின் போது அதிநவீன இலத்திரனியல் தராசுகள் மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி 4 மில்லியன் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

## கிழக்கு செயலாளர்கள் திடீரென...

நேற்று முன்தினமிரவு வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது ஆளுநரின் செயலாளர் டபிள்யு. மதநாயக்காவும் உடனிருந்தார். இதனடிப்படையில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக திருமதி. கலாமதி பத்மராஜா, மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக கலாநிதி எம்.கோபாலரத்னம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக திருமதி ஜே.ஜே. முரளிதரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை , கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திஸாநாயக்காவும், கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக கே.ஜீ.முத்துபண்டாவும் , கிழக்கு மாகாண பேரவையின் செயலாளராக எம்.வை.சலீமும், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக ஏ.எச்.எம்.அன்ஸாரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## விமலுக்கு எதிரான வழக்கு...

வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அமைச்சர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுகவீனம் காரணமாக நேற்று நீதிமன்றில் முன்னிலையாகவில்லை என குறிப்பிட்டதை அடுத்து விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

அத்தோடு முறைப்பாட்டாளரின் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது சாட்சிகளை அடுத்த விசாரணையின்போது நீதிமன்றில் முன்னிலைப் படுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

2010 – 2015 ஆட்சிக்காலத்தில் அமைச்சராக இருந்த காலத்தில் விமல் வீரவன்ச சுமார் 75 மில்லியன் ரூபாய் பணம் மற்றும் சொத்துக்கு உரிமையாளராக இருந்தாக தெரிவிக்கப்பட்டதையடுத்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் விமல் வீரவன்ச மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

## நாடு முழுவதும் ஒரு இலட்சம்...

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கமைய கிராமத்துக்கான வேலைத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 1,00,000 அபிவிருத்தித் திட்டங்கள் இன்று காலை 8.52 க்கு நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படுவதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் வரவு செலவு திட்ட முன்மொழிவுகளுக்கிணங்க, அபிவிருத்தி திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதிஒதுக்கீட்டை, மக்களின் தேவைக்கேற்ப பயன்படுத்த அரசு உத்தேசித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறைந்த பட்சம் ஒரு கிராம சேவையாளர் பிரிவில் ஐந்து அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் "ஒரு இலட்சம் அபிவிருத்தித் திட்டம்" ஆரம்பிக்கப்படுகிறது.

இந்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் விதம் தொடர்பாக நாடு முழுவதும் தேர்தல் தொகுதி மற்றும் கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் தொடர் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.

இதன்படி, மக்கள் எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை விரும்புகிறார்கள், அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென கிராம மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு, அந்தத் திட்டங்கள் அனைத்தும் இன்று (03) அனைத்து மக்கள் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் சுப வேளையில் அந்தந்த தொகுதிகளில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நாடு முழுவதுமுள்ள 336 பிரதேச செயலக பிரிவுகளும் உள்ளடங்களும் வகையில் 14, 021 கிராம சேவகர் பிரிவுகளிலும் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுவது முக்கிய அம்சமாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் அவர்கள் முன்வைத்த கொள்கைகளை கிராம மட்டத்தில் முன்னெடுக்கும் வகையில் கிராமத்துக்கான ஒரு இலட்சம் வேலைத் திட்டத்தை செயற்படுத்த முடிவு செய்யப்பட்டதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

கொரோனா தொற்றையடுத்து ஏற்பட்டுள்ள பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் வகையிலும் மனைப்பொருளாதாரத்தை பலப்படுத்தி தங்களுக்குத் தேவையானவற்றை தாமே உற்பத்தி செய்து நாட்டுக்கு பங்களிக்கும் வகையிலும் இந்த பாரிய அபிவிருத்தித் திட்டம் நாடு முழுவதும் இன்று ஆரம்பிக்கப்படுகிறது.

வாழ்வாதார அபிவிருத்தி, உணவு பாதுகாப்பு, புதிய வருமான வழிகள், கிராமிய உட்கட்டமைப்பு வசதி, அபிவிருத்தி, வர்த்தகம், வீட்டுத் திட்டங்கள் உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் கிராமிய மட்டத்தில் முன்னெடுக்கப்படுவதோடு உற்பத்திப் பொருளாதாரத்தை பலபடுத்தும் நோக்குடன் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் 2022 வரவு செலவுத்திட்டத்தில் இதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரூ.25 கோடி பெறுமதியான...

கடத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேக நபராக கருதப்படும் வெள்ளவத்தையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் குறித்த விசாரணைப் பிரிவு 4 இன் பொறுப்பதிகாரி இந்தச் சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைகளை ஆரம்பித்த நிலையில், சந்தேக நபர் கடந்த திங்கட்கிழமை (31) நாட்டை விட்டு வெளியேற முற்பட்டபோது கைது செய்யப்பட்டு கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இதன்போது அவரை இன்று மூன்றாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதிவான் புத்திக சி. ராகல உத்தரவிட்டிருந்தார்.

சுங்க திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் விஜித்த ரவிப்பிரிய கடந்த ஜனவரி மாதம் 18 ஆம் திகதி சிஐடிக்கு முன்வைத்த முறைப்பாட்டுக்கமைய இந்த விவகாரத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

நூரா மல்டி ட்ரேடர்ஸ் எனும் நிறுவனம் ஊடாக, பேரீச்சம் பழம், தங்க ஆபரணங்கள் பொருட்களை இறக்குமதி செய்யும் போர்வையில், இலங்கையிலிருந்த 12 இலட்சத்து 65 ஆயிரத்து 882 அமரிக்க டொலர்களை ( இலங்கை பெறுமதியில் 25 கோடியே 82 இலட்சத்து 39 ஆயிரத்து 928 ரூபா) அனுப்பப்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாக சிஐடியினர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளில், இவ்வாறு டொலர்களை அனுப்பியபோதும் அதற்கான பெறுமதியில் பொருட்கள் இறக்குமதி செய்யப்படவில்லை என தெரிய வந்ததாகவும், அது குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகவும் சிஐடியின் சட்டவிரோத சொத்து தொடர்பிலான விசாரணைப் பிரிவினர் நீதிமன்றுக்கு தெரிவித்தனர். இந்நிலையிலேயே 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கறுப்பு பண சுத்திகரிப்பு சட்டத்தின் கீழ் இது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில், வெள்ளவத்தையைச் சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகர்களான மொஹம்மட் அனீப் மொஹம்மட் ஆசிப், மொஹம்மட் நஸார் ஆகிய சந்தேக நபர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாகவும், அதனால் அந்த சந்தேக நபர்களின் வெளிநாட்டு பயணங்களை தடை செய்யுமாறும் சிஐடியினர் மன்றில் கடந்த ஜனவரி 28 ஆம் திகதி கோரினர்.

இதனை ஆராய்ந்த கொழும்பு பிரதான நீதிவான் புத்திக சி. ராகல சந்தேக நபர்கள் இருவரினதும் வெளிநாட்டு பயணத்தை தடை செய்ய உத்தரவிட்டதுடன், இது குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிஐடியின் சட்டவிரோத சொத்து க்கள் குறித்த விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே மொஹம்மட் அனீப் மொஹம்மட் ஆசிப் எனும் வர்த்தகர் வெளிநாடு செல்ல முற்பட்டபோது, விமான நிலையத்தில் வைத்து சிஐடியினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## சுற்றுலாத்துறை மீண்டும்... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்நாட்களில் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2500 ஆகவே உள்ளது.

ஒரு இலட்சத்து 35 ஆயிரம் சுற்றுலாப் பயணிகளை இந்த மாதம் நாம் எதிர்பார்த்திருந்தோம். இந்த நிலையில் பெரும் சவால்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## குருநாகலில் புதிய... (03 ஆம் பக்கத் தொடர்)

பிரிவு, அச்சகப் பிரிவு, தலைவர் அலுவலகம் போன்றவையும், இரண்டாம் மாடியில் கேட்போர் கூடம் மற்றும் கூட்ட மண்டபம் என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் பொதுநிர்வாக அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனும் கலந்து கொண்டார்.

## 21 மீனவர்களையும்... (03 ஆம் பக்கத் தொடர்)

இலங்கை மீனவர்களுக்கு இடையே உள்ள இந்த நீண்டகாலப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க வழிசெய்வதுடன் 21 மீனவர்கள் மற்றும் 2 விசைப்படகுகளை உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

## தனியார் துறையினருக்கும்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஈட்டுகின்றனரென்றும், 5,000 ரூபா கொடுப்பனவை வழங்குவதன் மூலம் தனியார் துறை ஊழியர்களுக்கிடையேயுள்ள துயரங்களை நிவர்த்தி செய்ய முடியுமென சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## தனியாரிடமிருந்து... (03 ஆம் பக்கத் தொடர்)

சமனல வெவ மின் நிலையத்தில் 61 ஜிகாவோட்ஸ் மின்சாரமே எஞ்சியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, தனியார் மின் நிலையங்களுடனான ஒப்பந்தங்களை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பது தொடர்பான கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கலந்துரையாடுமாறு இலங்கை மின்சார சபை அதிகாரிகள் மற்றும் அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் வரை தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## சட்டவிரோத இரவுநேர... (03 ஆம் பக்கத் தொடர்)

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது தவறை ஏற்றுக் கொண்டதன் பின்னர், 90 000 அபராதம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட சிகரெட்டுக்களை வைத்திருந்தமையை களியாட்ட விடுதியின் முகாமையாளர் ஏற்றுக் கொண்டமையால் அவருக்கு 60,000 அபராதம் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். ஏனைய சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## இயல்பு நிலைக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

அதன்மூலம் மின்சாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அதே தினத்தில் அந்த மின்பிறப்பாக்கி மீண்டும் செயலிழந்தது. அதனையடுத்து திருத்த வேலைகள் நடைபெற்று நேற்று முன்தினம் முதலாம் திகதி நள்ளிரவு முதல் அதன் மூலம் 100 மெகாவோட் மின்சாரம் மின் விநியோக கட்டமைப்புக்கு பெற்றுக் கொள்ளப்பட்டு வருவதாக மின்சார சபை தெரிவித்துள்ளது. (ஸ)

## ராகம வைத்திய பீடத்தின்...

வைத்திய பீடத்தின் 04 மாணவர்கள் காயமடைந்தனர். ராகம வைத்திய பீடத்தின் நான்காம் ஆண்டில் கல்வி பயிலும் சில மாணவர்கள் மீது விடுதியில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## நாட்டில் நியோகோவ் வைரஸ் பரவும்...

இது பரவும் பட்சத்தில் தொற்றுக்குள்ளாகாமல் பாதுகாத்துக் கொள்வதற்கு அனைவரும் தயாராக இருக்க வேண்டும் என பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் மருத்துவர் சுசி பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த வகை வைரஸ் தற்போது தென்னாப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பரவி வருகிறது. இதனால் பாதிக்கப்படும் மக்கள் உயிரிழக்கும் அபாயம் உள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த கொவிட் மாறுபாட்டு வைரஸில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றிருப்பது அவசியமாகும். இதனால் உடனடியாக சென்று பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறு அவர் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சகல பாடசாலைகளுக்கும் மார்ச் 07 வரை...

இதன்படி இக் காலப்பகுதியை உள்ளடக்கும் வகையில் மார்ச் 07 ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஏற்கனவே ஆரம்ப பிரிவுகளுக்கு விடுமுறை வழங்குவதில்லையென்ற தீர்மானத்தை கல்வி அமைச்சு எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்குவதாக கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக நேற்று அறிவித்துள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சையின் போது ஆரம்பப் பாடசாலைகளைத் திறக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு தெரிவித்திருந்தது.

நாளை பெப்ரவரி 04ஆம் திகதிக்குள் அனைத்துப் பாடசாலைகளையும் மூட வேண்டுமென ஒன்றியத்தின் பிரதம செயலாளரான ஜோசப் ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.

# பதுளை தேசிய கல்வி நிறுவக பிரியாவிடை நிகழ்வும் நூல் வெளியீடும்



தேசிய கல்வி நிறுவகம் ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளும் கல்விமாணி கற்கைநெறியின் பதுளை நிலைய

(2017 2020) தொகுதி கற்கைநெறி ஆசிரியர் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த

பிரியாவிடை நிகழ்வும், ' நினைவேட்டில் தாரகைகள்' நூல் வெளியீட்டு நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமையன்று பதுளை கெப்பிட்டல் சிடி ஹோட்டலில் கல்விமாணி கற்கைநெறியின் பேரவை தலைவர் எஸ். வசந்தகுமார் தலைமையில் இடம் பெற்றது.

பதுளை கல்விமாணி கற்கைநெறி நிலையத்தில் அர்ப்பணிப்புமிக்க சேவையாற்றிய விரிவுரையாளர்கள் அனைவரும் ஆசிரியர் மாணவர்களால் மாலைச்சூடி பொன்னாடைப் போர்த்தி நினைவுச்சின்னங்கள், பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

மலையகத்தின் ஊவா மாகாண மண்ணுக்கு பெருமைச்சேர்த்த கல்வித்துறையில் சாதனைப்படைத்து கல்வியியலாளராகவும், கல்விப்பணிப்பாளராகவும், ஆசிரியர் ஆலோசகராகவும், அதிபராகவும் , தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளராகவும், தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி கற்கைநெறியின் தேசிய மற்றும் பிராந்திய இணைப்பாளர்களாகவும் திகழ்கின்ற விரிவுரையாளர்கள் பற்றியும் அவர்கள் கடந்துவந்த பாதைச்சுவடுகளின் மீள்பார்வையாக 'நினைவேட்டில் தாரகைகள், நூலின் ஆக்கங்களாக வெளிவந்துள்ளமைக் குறிப்பிடத் தக்கது.

நடராஜா மலர்வேந்தன்

# NLP மூன்றாம் நிலைக்கல்வி அரங்கில் புதிய தளத்தை உருவாக்குகிறது

பேராசிரியர் எஸ்.சந்திரசேகரம்

*NLP* நிறுவனத்தின் திட்டங்கள், புதுமையான சட்டங்கள் சமகால அதி நவீன மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி அரங்கில் புதிய தளத்தை உருவாக்குகிறது என்று பேராசிரியர் எஸ். சந்திரசேகரம் தெரிவித்தார்.

*NLP* பயிற்சி நிறுவனத்தின் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டுரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,..

இந்த நிறுவனம் நடத்தும் *NLP* திட்டங்கள் தற்போது சமூகத்தை பாதிக்கும் மற்றும் தேவையற்ற ஆரோக்கியம், நடத்தைகளான பயம், அடிமையாதல், குடும்பம், வேலை, மோதல்கள், சமநிலை தவறுதல், தூக்கக் கோளாறுகள், பதற்றம் போன்ற பல்வேறு நிலைமைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.





இலங்கையின் முன்னணி *NLP* பயிற்சி நிறுவனமான *Institute of Hypnosis and NLP Lanka (IHNLP)* தனது விருது வழங்கும் விழா சனிக்கிழமை இலங்கை மன்றக் கல்லூரி, கொழும்பு 07 வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக *Esoft metro campus* உபவேந்தரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வி பீடத்தின் முன்னாள் பீடாதிபதியுமான பேராசிரியர் எஸ்.சந்திரசேகரம், கௌரவ அதிதியாக தலைவர் கைத்தொழில் அமைச்சு தேசிய வடிவமைப்பு நிலையம் அஜித் ஜயவர்தன, *MD &CEO* பிரிட்ஜ் டு பிரிட்ஜ் சொலூசன் முதன்மை செயல்வினை ஸ்பீன்கேர் இன்டர்நேஷனல் அலுவலர் பிரசன்ன விஜயசிங்க ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்த சான்றிதழ் வழங்கும் விழாவின் போது சான்றளிக்கப்பட்ட *NLP* பயிற்சியாளர் மற்றும் முதுநிலை பயிற்சியாளர்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.



74 ஆவது தேசிய சுதந்திர தினத்தையொட்டி புறக்கோட்டை பிரதான வீதியில் தேசிய கொடிகள் விற்பனை செய்யப்படுவதை படத்தில் காணலாம்.

படம்: வடகொழும்பு தினகரன் நிருபர்


## பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2022 பிப்ரவரி மாதம் 24 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ. பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது

தங்க கடன் பிரிவு. வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் ஃபினான்ஸ்




இலங்கையின் கடைசி தமிழ் மன்னரான மதுரை நாயக்க வம்சத்து ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கனின் 190ஆவது நினைவு நாள் குருபூஜை தினம் மதுரை நாயக்க அரசக் குடும்பத்தைச் சேர்ந்த மன்னரின் வாரிசுகளில் ஒருவரான வி.அசோக் ராஜா தலைமையில் தமிழகத்தின் வேலூர் மன்னரின் மணிமண்டபத்தில் (31) காலை வெகு சிறப்பாக நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம்.

படம்: வடகொழும்பு தினகரன் நிருபர்


## பெறுகை அறிவித்தல்

**மோட்டார் வாகனங்களிற்கான வருமான உரிமங்களை அச்சிடுதல் - 2022**

**தென் மாகாண மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**

தென் மாகாண மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம், 2022ஆம் ஆண்டிற்கான வருமான உரிமங்களை அச்சிடுவதற்காக விலைமனுக் கோருகின்றது.

பாதுகாப்பான அச்சுக்கடதாசிகள் மற்றும் மை வகைகளை உபயோகித்து வருமான அதிகாரப் பத்திரங்களை அச்சிடுதலில் ஈடுபட்டு அனுபவமுள்ள தேசிய அச்சுக்கூடங்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

விபரக்குறிப்புக்களடங்கிய மாதிரிப்படிவங்களை ரூபா 1500.00 இற்கான கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**மாதிரிப்படிவங்களை வழங்கல் : 2022.02.03 முதல் 2022.02.23 அன்று பி.ப. 3.00 வரை**
**விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் : 2022.02.24 அன்று பி.ப. 1.30 வரை**
**விலைமனுத்திறத்தல் : 2022.02.24 அன்று பி.ப. 2.00**

மேலதிக விபரங்களிற்காக தொலைபேசி இலக்கம்: 091-4944225/ 091-2229594 ஐ அழைக்கவும்

**தென் மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர்**
**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்,**
**இலக்கம் 15ஏ, பஹல டிக்சன் வீதி, காலி.**
**2022.02.03**



## அறிவித்தல்

**1990ஆம் ஆண்டு 12ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாண சுற்றாடல் சாசனத்தின் 44 (2) ஆம் உட்பிரிவு -**

**உத்தேசித்துள்ள தொழில்நுட்ப கருங்கல் உடைக்கும் (ஐ.எம்.எல் "ஏ" தொகுதி) திட்டம் -**
**என்.ஈ.எம். கன்ஸ்ரக்சன் தனியார் நிறுவனம்,**
**கெசெல்வத்த ஹேன, வதாகட**

1990 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாண சுற்றாடல் சாசனத்தின் 44(2) ஆம் உட்பிரிவின்படி வதாகட, வதாவ என்ற முகவரியில் அமைந்துள்ள என்.ஈ.எம். கன்ஸ்ரக்சன் தனியார் நிறுவனத்தினால் பொல்கஹவெல பிரதேச செயலக பிரிவில், வதாகட, கெசெல்வத்த ஹேன என்ற முகவரியில் ஆரம்பிப்பதற்கு உத்தேசித்துள்ள தொழில்நுட்ப கருங்கல் உடைக்கும் (ஐ.எம்.எல் "ஏ" தொகுதி) திட்டத்திற்கு உரிய பூர்வாங்க சுற்றாடல் பரிசீலனை அறிக்கையினை இந்த அறிவித்தல் விடுக்கப்படும் திகதி தொடக்கம் (அரச விடுமுறை தினம் சனி ஞாயிறு தினங்கள் தவிர்த்து 30 நாட்களினுள் மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 4.15 வரை பொது மக்களினது பரிசீலனைக்காக கீழ் காணப்படும் இடங்களில் வைக்கப்படும்.

1. பிரதம செயலகம் - குருணாகல்
2. மாவட்ட செயலகம் - குருணாகல்
3. மாகாண சுற்றாடல் அதிகார சபை (வடமேல்) - தம்புள்ள வீதி, குருணாகல்
4. பிரதேச செயலகம் - பொல்கஹவெல
5. பிரதேச சபை - பொல்கஹவெல
6. புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க அலுவலகம் - பிரதேச அலுவலகம், குருணாகல்
7. சபுகஸ்கந்த ஸ்ரீ விஜயசுந்தராராம விஹாரை - சபுகஸ்கந்த, வதாகட
8. ஜும்மா மஸ்ஜித் பள்ளி - வதாவ, வதாகட

இது பற்றிய கருத்துக்களை தெரிவிப்பதற்கு விரும்புகின்ற பொது மக்கள் அக்கருத்துக்களை இவ் அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதி தொடக்கம் 30 அரச வேலை நாட்களினுள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்குமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எஸ்.கே. லேனதுவ,**
**பணிப்பாளர்,**
**மாகாண சுற்றாடல் அதிகார சபை (வடமேல்),**
**தம்புள்ள வீதி,**
**குருணாகல்.**



## இலங்கை வங்கி

**விலைமனுக் கோரல்**

**இலங்கை வங்கியின் கிழக்கு மாகாணத்திற்கு மூன்று நலன்புரி வாகனங்களை வழங்குதல்**

வாடகை அடிப்படையில் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு மூன்று நலன்புரி வாகனங்களை வழங்க விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**இவ் விலைக்கூறலில் பங்கெடுக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் கீழ்க்கண்ட தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.**

- பயணிகள் போக்குவரத்து வாகனமாகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் உயர் கூரை வாகனமாகவும், 14 பயணிகள் வசதியாகப் பயணிக்கக் கூடிய வகையில் அமைந்திருக்க வேண்டும்.
- வாகனமானது இரட்டைக் குளிரூட்டி வசதியைக் கொண்டிருக்க வேண்டும்.
- முன்மொழியப்படும் வாகனமானது 2012 அல்லது அதற்குப் பிந்திய ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டதாகக் காணப்படவேண்டும்.
- வாகனமானது பயணிகளுடன் பூரணமாகக் காப்புறுதி செய்யப்பட்டதாகக் காணப்பட வேண்டும்.
- ஏலவிலை கோருபவர் உரிய மாவட்டத்தின் அடிப்படையில் வாகனங்களை வழங்கக் கூடியவராகக் காணப்பட வேண்டும்.
- வாகனத்தின் பராமரிப்புச் செலவு, ஓட்டுனரின் சம்பளம், காப்புறுதி மற்றும் எரிபொருள் கட்டணமானது வாகனத்தின் உரிமையாளரால் பொறுப்பேற்கப்படவேண்டும்.
- நிறுவனத்தின் தேவைக்கமைய வாகனம் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். மேலும், வாகன சாரதி அனுபவமுடையவராகவும் ஒழுக்கமுடையவராகவும் காணப்பட வேண்டும்.

உரிய விண்ணப்பமானது செயற்பாட்டு முகாமையாளர் (கிழக்கு மாகாணம்), இலங்கை வங்கி, கிழக்கு மாகாண அலுவலகம், இல. 455, பிரதான வீதி, திருகோணமலை அல்லது உரிய மாவட்ட காரியாலயங்களில் (அம்பாறை, மட்டக்களப்பு) மீளளிக்க முடியாத விலைமனுக் கட்டணம் ரூபா.1,500/- + VAT வைப்புச் செய்து பெற்றுக் கொள்ளமுடியும். 17.02.2022 அன்று காலை 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு உங்களது விலைமனுக்களை கிழக்கு மாகாண காரியாலயத்தில் உள்ள விலைமனுப் பெட்டியில் இடலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கமுடியும். தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் **"நலன்புரி வாகனத்திற்கான விலைமனுக் கோரல், ...................... மாவட்டம்"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு செயற்பாட்டு முகாமையாளர், தொலைபேசி இல. 026-2226398 ஊடாக வார நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**செயற்பாட்டு முகாமையாளர் (கிழக்கு மாகாணம்)**
**இலங்கை வங்கி**
**கிழக்கு மாகாண அலுவலகம்**
**இல. 455, பிரதான வீதி, திருகோணமலை**
**தொ.பே. 026-2226398**

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



திகதி 01.02.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4665
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,965,630.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 3 1 4 7 0 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 36,858,956.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2960
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,129,920.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 17 52 65 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.62,188,747.20

Mega Power மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 1013 மெகா அதிர்ஷ்ட இலக்கம் 03401
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,148,600.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 205,072,634.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Q சுப்பர் இலக்கம் 14 வெற்றி இலக்கங்கள் 09 58 67 73

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 695
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,934,120.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 61 62 69 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,000,685.20

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0006
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,897,660.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 11 22 38 47
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,540,914.36

செவண
சீட்டிழுப்பு இலக்கம் :352
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,397,160.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 22 29 37 63
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,270,151.20

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416







உலக சதுப்பு நில தின விழிப்புணர்வு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் (O1) யாழ். கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியால யத்தில் இடம்பெற்றுள்ளது. பாடசாலை அதிபர் K. திலீபன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. எதிர்காலத்தை நோக்கிய சுற்று சூழல் கழகமும், கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலய சுற்றாடல் கழகமும் இணைந்து நடத்திய இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஏ.எம். றியாஸ் அகமட், சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப்பணிப்பாளர் க.சுப்ரமணியம், சுற்று சூழல் கழக தலைவர் லி.கேதீஸ்வரன். கழக செயலாளர் ம.சசிகரனும் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தனர்.

# நெல்லுக்கு தரமான விலை

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

விவசாய அமைச்சின் நெல் சந்தைப்படுத்தல் சபையானது முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளிடமிருந்து காய்ந்த நெல்லினை தரமான விலைக்கு கொள்வனவு செய்யவுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் உதவி பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

03.02.2022 இன்று தொடக்கம் மாவட்டத்தில் உள்ள நெல் களஞ்சியங்களில் நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

அந்தவகையில் சிகப்பு நாடு, வெள்ளைநாடு 90 ரூபாவாகவும், ஏற்றுக்கூலி 2 ரூபாவாக மொத்தம் 92 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படவுள்ளதுடன், சம்பா நெல்லு 92 ரூபாவாகவும் ஏற்றுக்கூலி 2ரூபாவுடன் 94 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படவுள்ளது, கீரிச்சம்பா 95ரூபாவாகவும் ஏற்றுக்கூலி 2ரூபாவுடன் 97 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நெல் பை ஒன்று 40 ரூபாவாகவும், காய்ந்த நெல்லின் ஈரத்தன்மை 14 வீதத்திற்கு குறைவாகவும், சம்பா 9 வீதத்திற்கு குறைவானதாகவும் இருக்கவேண்டும் என்பதுடன் முள்ளியவளை, தண்ணீரூற்று, குமுழமுனை,முறிப்பு பகுதிகளில் உள்ள நெல் சந்தைப்படுத்தல் களஞ்சியங்களில் விவசாயிகள் நெல்லினை உரிய முறையில் கொடுக்கலாம் என்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் உதவி பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# காதல் விவகாரம்: வீடு புகுந்து தாக்குதல்

**கோப்பாய் குறுப் நிருபர்**



யாழ்.கோண்டாவில் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது தாக்குதல் நடத்தியவர்களை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது மோட்டார் சைக்கிளில் வந்த குழு ஒன்று கோண்டாவில் பகுதியிலுள்ள வீடொன்றில் அத்துமீறி நுழைந்து தாக்குதலை நடத்தியது.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சி.சி.டி.வி காட்சிகளை அடிப்படையாக வைத்து விரைந்து செயற்பட்ட கோப்பாய் பொலிஸார் சந்தேகநபர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் யாழ் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இச்சம்பவம் காதல் விவகாரம் காரணமாக இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்

# எழுத்துமூலம் உத்தரவாதம் வழங்கும் வரை மீனவர் போராட்டம் தொடரும்

சுப்பர்மடம் மீனவர்கள்





**நாகர்கோவில் விஷேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்**

இந்திய இழுவைப் படகுகளின் எல்லை தாண்டிய அத்துமீறலை தடுத்து நிறுத்துவதற்கு தகுதி வாய்ந்த அதிகாரிகள் உத்தரவாதத்தை எழுத்து மூலமாக வழங்க வேண்டும். அதுவரை மீனவ சமுதாயத்தின் போராட்டம் தொடர்ந்து இடம்பெறும் என சுப்பர்மடம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போராட்டத்தை வடமாகாணரீதியில் விரிவுப்படுத்த பொதுஅமைப்புகள் ஆதரவு வழங்க வேண்டுமெனவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்,வத்திராயன் பகுதியில் 2 மீனவர்கள் உயிரிழந்தமைக்கு நீதி வேண்டியும் வடமராட்சியில் நேற்று புதன்கிழமை (02) மூன்றாவது நாளாக தொடர் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

சுப்பர்மடம் பகுதியில் வீதியில் பந்தல் அமைத்து வீதி மறிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வடபகுதி கடற்பரப்பில் எல்லை மீறும் இந்திய படகுகளை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது குறித்து உத்தரவாதத்தை தகுதி வாய்ந்த அதிகாரிகள் எழுத்து மூலமாக வழங்கவேண்டும். அதுவரை மீனவ சமுதாயத்தின் போராட்டமானது திட்டமிட்ட வகையில் பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் தொடரும். தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக எமது கடல் வளம் அழிக்கப்பட்டு வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் தற்போது இரு உயிர்களையும் பறிக்கொடுத்துள்ளோம். இந்நிலையில் இந்த அவலத்திற்கு நிரந்தர தீர்வு காணும் வரை மீனவர் சமுதாயம் பருத்தித்துறை பொன்னாலை வீதியில் தொடர் சாலை மறியல் மற்றும் கடற்றொழில் மறிப்பு போராட்டத்தை முன்னெடுத்து வரும்.

இப்போராட்டமானது பாதிக்கப்பட்ட மீனவ சமூகம் ஒன்றிணைந்து மக்கள் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு சமாசம் மற்றும் சம்மேளத்தினர் எவ்வித தொடர்புமில்லை. மக்களால் தொடரப்படும் இப்போராட்டமானது மீனவர்களுக்கான உரிய தீர்வு கிடைக்கும் வரை தொடரும்.

மேலும் இப்போராட்டத்தை வடமாகாணம் தழுவிய ரீதியில் விரிவுபடுத்துவதற்கு பொது அமைப்புகளிடம் ஆதரவு கோரி நிற்கின்றோம். இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலால் பாதிக்கப்பட்ட சமூகமாக நாம் இழப்புக்களையும் துயரங்களையும் சந்தித்து வருகின்றோம். இந்த துயரத்துக்கு முடிவு கிடைக்கும் வரை நாம் முன்னெடுக்கும் இப்போராட்டத்திற்கு வடமாகாணத்திலுள்ள வர்த்தக சங்கங்கள், போக்குவரத்து அமைப்புகள், மற்றும் பொது அமைப்புகள் ஆதரவு வழங்குமாறு வேண்டுகிறோம் என அவர்கள் தெரிவித்தனர்.

# கர்ப்பிணிப் பெண் படுகொலை சம்பவம் 5 வருடங்களின் பின் சந்தேகநபர் கைது

**யாழ். விசேட நிருபர்**

ஊர்காவற்துறை பகுதியில் கர்ப்பிணிப் பெண்ணொருவரை அடித்து படுகொலை செய்த சம்பவத்தின் சந்தேகநபர் ஐந்துவருடங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் விசாரணைகளின் பின்னர் நேற்றைய தினம் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது சந்தேகநபரை எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஊர்காவற்துறை பகுதியில் கடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஞானசேகரன் ஹம்சிகா (வயது 27) எனும் 7 மாத கர்ப்பிணிப் பெண் அடித்துக் கொலை செய்யப்பட்டு, அவரது நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

அது தொடர்பிலான விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் முன்னெடுத்தனர். இந்நிலையில் ஐந்து வருடங்களின் பின்னர் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை கொலை நடந்த அன்றைய தினமே சகோதரர்கள் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது 17 மாத காலம் அவர்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். எனினும் மேல் நீதிமன்ற உத்தரவில் பிணையில் விடுவிக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.




யாழ்.நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்களுக்கு சிவசங்கரபண்டிதர் வாழ்வும் வளமும் நூல் இலவசமாக வழங்கப்பட்டது. நீர்வை தியாக. மயூரகிரி குருக்கள் எழுதி லண்டன் ஞானமயம் வேதாகம அக்கடமி வெளியீடாக மலர்ந்துள்ள சிவசங்கரபண்டிதர் வாழ்வும் வளமும் என்ற நூல் நேற்றுமுன்தினம் 01.02.2022 காலை நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டது. படம் கோப்பாய் குறூப் நிருபர்நீர்வேலி

# மன்னாரில் கொரோனா திடீர் அதிகரிப்பு

**மன்னார் குறுப் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் கடந்த இரு தினங்களில் 99 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று புதன்கிழமை (2) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை (31) 60 கொரோனா தொற்றாளர்களும்,நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (1) 39 கொரோனா தொற்றாளர்கள் உள்ளடங்களாக கடந்த 2 தினங்களில் 99 கொரோனா தொற்றாளர்கள் அன்டிஜன் பரிசோதனை மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த சடுதியான எண்ணிக்கை அதிகரிப்பையடுத்து மன்னார் மாவட்டத்தில் ஓமிக்ரோன் தொற்று பரவல் ஏற்பட்டிருக்கக் கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எனவே பொதுமக்கள் விழிப்புடனும், அவதானத்துடனும் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மக்கள் சுகாதார வழிமுறைகளை கடைபிடிப்பதோடு, மூன்றாவது அல்லது பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக அதை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

2 ஆவது தடுப்பூசியை பெற்றுக் கொண்டு 3 மாதங்கள் கடந்த 20 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் ,மூன்றாவது அல்லது பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

இதுவரையில் மன்னார் மாவட்டத்தில் 3423 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் 36 கொரோனா தொற்று மரணங்கள் மன்னார் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளது.

இவ்வருடம் ஜனவரி 2 ஆம் திகதி கொரோனா மரணம் பதிவாகியுள்ளது. இவ்வருடம் தற்போது வரை 240 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு முதலாவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது. மொத்தமாக 12,500 மாணவர்கள் தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர்.

# அன்னை திரேசா வீதிக்கு ஒரு வார கால பூட்டு

மக்கள் அவதி

**வவுனியா விசேட நிருபர்**



வவுனியா, மணிபுரம் அன்னை திரேசா வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. வீதியின் அபிவிருத்தி பணிகள் கடந்த ஒரு வாரகாலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையால் ஒருவார காலத்துக்கு மூடப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் வேறு பாதையின்றி மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

வவுனியா தெற்கு பிரதேச சபையின் கீழ் குறித்த வீதி கல்லிட்டு தாரிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மாற்றுப்பாதையை ஏற்படுத்தி கொடுக்காது, வீதியின் அபிவிருத்தி பணிகள் முன்னெடுத்து செல்லப்படுகின்றமையினால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

வீதியின் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு கற்கள் பரவப்பட்டுள்ளதுடன், கற்கள் வீதியின் கரையிலும் சிதறி காணப்படுவதனால் அப்பாதையூடாக மக்கள் நடந்து செல்வது கூட முடியாது, ஒருவார காலமாக மந்த கதியில் வீதி அபிவிருத்தி பணிகள் இடம்பெறுவதினால் தமது வாகனங்களை கூட குறித்த வீதியூடாக எடுத்துச்செல்ல முடியாமல் வேறு இடங்களில் வாகனங்களை நிறுத்தி வைக்க வேண்டிய நிலை அப்பகுதி மக்களுக்கு உருவாகியுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி மக்கள் வீதியின் ஓரமாக நடைபாதையில் நடந்து செல்வதற்காவது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# மலையகத்திற்கான பல்கலைக்கழகம் மிக விரைவில் உருவாக்கப்படும்

## நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம் ரமேஸ்வரன் தெரிவிப்பு

**ஹற்றன் விசேட நிருபர்**

மலையகத்திற்கான பல்கலைக் கழகம் மிக விரைவில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் உருவாக்கப்படும் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளாருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் அங்குராங்கெத்த பிரதேச சபைக்குட்பட்ட நாமகள் கபரக்கலை தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதி மற்றும் உயர்தரம் ஆரம்பிப்பதற்கான புதிய கட்டடம் என்பன திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் நேற்றுமுன்தினம் (01) இடம்பெற்றது.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், மலையகத்தில் வளங்கள் பல இருக்கின்றன. ஆனால் அவற்றில் பெறுபேறுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. ஒருசில பாடசாலைகளில் வளங்கள் பற்றாக்குறையாக காணப்படுகின்ற போதிலும் அவற்றில் நல்ல பெறுபேறுகள் கிடைத்துள்ளன. இப்பாடசாலையும் அப்படித்தான் நல்ல பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றுள்ளனர்.

சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் தற்போதைய இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகிய அனைவரும் கல்விக்கு முக்கியத்துவமளித்து வருகின்றனர்.

நாங்கள் பெருந்தோட்ட தொழில் துறையை நம்பி இருந்தோம். ஆனால் தற்போது அந்த துறையினை மாத்திரம் நம்பியிருக்க முடியாது. ஆகவே நீங்கள் கல்வி கற்றால் மாத்திரம் தான் அதனை செய்ய முடியும். அன்று முதல் இன்று வரை இ.தொ.காவின் தலைவர்கள் கல்விக்கு சேயையாற்றி வருகின்றனர். இன்று எமக்கு இளம் தலைவர் ஒருவர் கிடைத்துள்ளார். அவர் இந்த சமூகத்திற்கு தேவையான விடயங்களை எதிர்காலத்தில் நிச்சயம் பெற்றுக்கொடுப்பார் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கடந்த வருடம் இடம் பெற்ற சாதாரண தர பரீட்சை மற்றும் தரம் 05 புலமை பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் , பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி ராமேஸ்வரன் மற்றும் நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ், ஹங்குராங்கெத்த பிரதேச சபை உறுப்பினர்கள், வலயக்கல்வி பணிப்பாளர்கள், கோட்ட கல்விபணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# ஹல்துமுல்ல நீட்வுட் பாடசாலைக்கு மறுசீரமைக்கப்பட்ட கட்டடம்



நீட்வுட் இலக்கம் 1 பாடசாலையில் மறுசீரமைக்கப்பட்ட கட்டடத்தை இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார்.

பழைய கட்டடம் மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்றதாக இல்லாததால் மாணவர்கள் பெரும் சிரமத்தை சந்தித்தனர்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கோரிக்கைக்கு அமைய, செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின்கீழ் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லுணுகலையில் அதிகரிக்கும் கொரோனா

**லுணுகலை நிருபர்**

லுணுகலை சுகாதார பிரிவில் நேற்றுமுன்தினம் (01) 64 நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளில் 28 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்து செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் இவர்களுடன் தொடர்புகளை பேணியோருக்கு அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் லுணுகலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சுகாதார வழிகாட்டல்களை முறையாக பின்பற்றுவதுடன் தேவையற்ற பிரயாணங்களையும் ஒன்றுகூடல்களையும் தவிர்த்து கொள்ளுமாறும் லுணுகலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

# சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தவும்

**எம்.ஏ.அமீனுல்லா**

கண்டி, ஹக்கிந்த தீவுப் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத ஆக்கிரமிப்புகள் உள்ளிட்ட மனித செயற்பாடுகளைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டுமென கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் வசந்த யாப்பா பண்டார தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (02) நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,



சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிறப்பாகச் செயற்பட வேண்டும் என்றும், அனுமதியற்ற கட்டடங்கள் குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மகாவலி ஆற்றுப்பகுதியான ஹக்கிந்த தீவுப்பகுதியில் அங்கீகரிக்கப்படாத சட்டவிரோத கட்டுமானங்கள், நிலம் கையகப்படுத்துதல், குப்பைகளை கொட்டுதல், உள்ளிட்ட சட்டவிரோத செயல்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருகின்றது. இவற்றை தடுக்க சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றை கையகப்படுத்துமாறு சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை, இலங்கை மகாவலி அதிகார சபை, கண்டி மாநகர சபை மற்றும் பொலிஸ் உள்ளிட்ட அதிகாரங்களைப் பிரயோகித்து பிரதேசத்தைப் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் வசந்த யாப்பா பண்டார சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு

நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட கட்டுப்பாட்டு பிரதேசங்களில் டெங்கு பரவாமலிருக்க சிரமதான பணிகளை நுவரெலியா பிரதேச சபை முன்னெடுத்து வருகிறது.

நுவரெலியா பிரதேச சபையின் தவிசாளர் வேலு யோகராஜியின் வேண்டுகோளுக்கு அமைவாக "சுத்தமான சூழலை உருவாக்குவோம்" எனும் தொனியில் இச்சிரமதான பணி ஒருவார வேலைத்திட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

நுவரெலியா பிரதேச சபை அதிகாரத்துக்குட்பட்ட மீபிலிமான தொடக்கம் கந்தேஎல, அம்பேவல, பட்டிபொல, கந்தப்பளை, நானுஓயா, பொரலந்த, ஹக்கலை ஆகிய பிரதேசங்களில் சிரமதான பணிகள் மேற்கொள்ளப்படுகிறன.



இச்சிரமதான பணியின் ஊடாக டெங்கு பரவக்கூடிய நீர் தேங்கி நிற்கும் இடங்கள், அசுத்த நீர் ஓடைகள் என்பவற்றை சுத்தம் செய்தல், பிரதான வீதிகளில், வீசியெறிந்த குப்பைகளை அகற்றல், பிரதேசவாசிகள் பாவிக்கும் பஸ்தரிப்பு நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நுவரெலியா பிரதேச சபையின் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்களுடன் சபை தவிசாளர் வேலு யோகராஜியும் களத்தில் இறங்கி ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வேலைத்திட்டமானது தொடர்ச்சியாக நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் வேலு யோகராஜ் தெரிவித்தார்.

# தடுப்பூசி விடயத்தில் அரசின் நடவடிக்கை பாராட்டத்தக்கது

## பாராளுமன்ற உறுப்பினர் இராதா கிருஷ்ணன்



**மாவத்தகம தினகரன், அக்குறணை குறூப் நிருபர்கள்**

தடுப்பூசி விடயத்தில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பாராட்ட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

செரின் அழகியற் கற்கைகள் நிறுவனத்தின் வருடாந்த சான்றிதழ் மற்றும் பரிசளிப்பு வைபவம் கண்டியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது,

அழகுக்கு அழகு சேர்க்கும் ஒரு கலையே அழகியற்கலையாகும். அத்தகைய கலைக்கு ஒரு பயிற்சி தேவை. அப்பயிற்சியைப் பெற இடமொன்று தேவை. அதனையே அழகியற்கற்கை நிறுவனங்கள் செய்கின்றன. இது ஒரு வகையில் அரசின் சார்பாக தொழில் வழங்கும் ஒரு பணியாகக் கூட கருதலாம்.



கல்வியைக் கற்றுத் தேர்ந்த எல்லோருக்கும் அரசினால் தொழில் வழங்க முடியாது. அப்படியானவர்களுக்கு இது ஒரு சுய தொழில் வழிகாட்டலாகவும் உள்ளன. எனவே சரியான முறையில் அவற்றை நாம் பயன்படுத்த வேண்டும்.

இன்றைய காலக்கட்டத்தில் கொவிட் காரணமாக பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டுள்ள போதும் எமது அரசு கடன் பெற்றேனும் தடுப்பூசிகளை கொள்வனவு செய்துள்ளது. எனவே சகலரும் பூஸ்டர் தடுப்பூசி வரை 3 மாத்திரைகளையும் பெற்று தேசிய பணியை நிறைவு செய்ய உதவவேண்டும்.

தடுப்பூசி விடயத்தில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பாராட்ட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# காடுகளுக்கு தீ வைப்பவர்களை உடன் கைது செய்ய வேண்டும்

**ஹற்றன் விசேட நிருபர்**



மலையகத்தில் தற்போது நிலவி வரும் வரட்சியான காலநிலையினையடுத்து காடுகளுக்கு தீ வைக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் பல ஏக்கர் வன பிரதேசங்கள் எரிந்து நாசமாகியுள்ளன. தொடர்ச்சியாக இவ்வாறு காடுகளுக்கு தீ வைப்பதனால் பாரிய அளவில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. ஆகவே காடுகளுக்கு தீ வைப்பவர்களை உடன் கைது செய்ய வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றைய தினமும் (01) டயகம டெவிட் பண்ணை பகுதியில் இனந் தெரியாத விசமிகளால் அப்பகுதியிலுள்ள காட்டுப்பகுதிக்கு தீ வைத்ததன் காரணமாக பல ஏக்கர் வன பிரதேசங்கள் எரிந்து சாம்பலாகியுள்ளன.

இதனால் இப்பகுதியில் உள்ள பெறுமதிமிக்க மரக்கன்றுகள் அழிந்து போய் உள்ளதுடன் சிறிய வகை உயிரினங்கள் நீரூற்றுக்கள், அரிய வகை தாவரங்கள் ஆகியன அழிவடையும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளன.

தற்போது வரட்சியான காலநிலையினையடுத்து பல பிரதேசங்களில் குடி நீர் தட்டுப்பாடு நிலவுவதனால் இந்நிலைமை மேலும் அதிகரிக்கலாம்.

எனவே இந்த காடுகளுக்கு தீ வைப்பதனை உடன் நிறுத்த வேண்டும் என பலரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.



தலவாக்கலை கிரேட்வெஸ்டன் பாடசாலையில் தரம் 5 முதல் தரம் 11 வரையான மாணவர்களின் பொங்கல் விழா நேற்று பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# தோட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

**நோட்டன் பிரிட்ஜ், ஹற்றன் விசேட நிருபர்**

பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் டியன்சின் தோட்ட தொழிலாளர்கள் இரண்டாவது நாளாகவும் தொழிலுக்கு செல்லாது ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர் .

இந்த ஆர்ப்பாட்டம் 02.02.2022. புதன்கிழமை ஹற்றன் பொகவந்தலாவ பிரதான வீதியின் டியன்சின் சந்தியில் சங்கு ஊதி ஒப்பாரி பாடல் பாடி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

டியன்சின் தோட்ட தொழிலாளர்களுக்கு பச்சை தேயிலை கொழுந்தினை நிறுவை செய்வதற்கு தோட்ட நிர்வாகம் டிஜிட்டல் தராசினை பயன்படுத்துமாறு தொழிலாளர்களை வற்புறுத்தி வருவதாகவும். டிஜிட்டல் தராசினை பயன்படுத்தி தேயிலை கொழுந்தினை நிறுவை செய்ய முடியாது எனவும் பழைய முறையிலான தராசினை தோட்ட நிர்வாகம் பயன்படுத்த வேண்டுமென தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



இவ்விடயம் தொடர்பில் 01.02.2022 செவ்வாய்கிழமை பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியோடு கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றபோது தொழிலாளர்களை தகாதவார்த்தைகளைக் கொண்டு பேசியமையினால் தோட்ட முகாமையாளர் மற்றும் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோர் எம்மிடம் மன்னிப்பு கோர வேண்டும் அல்லது எமது தோட்டத்தை விட்டு தோட்ட முகாமையாளர் வெளியேற

# கிழக்கின் குரல்



# இஸ்லாமாபாத் வீட்டுத் திட்ட கழிவு நீர் பிரச்சினைக்கு தீர்வு வேண்டி, விகாராதிபதி தலைமையில் ஆர்ப்பாட்டம்

**பெரியநீலாவணை விஷேட, கல்முனை வஷேட நிருபர்கள்**

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இஸ்லாமாபாத் குடியிருப்பு வீட்டுத்திட்டத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரினால், அப்பிரதேச மக்கள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து நேற்று (02) பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



கல்முனை சுபத்திராம விகாரைக்கு முன்னால் ஒன்று கூடிய மக்கள், அங்கிருந்து சுலோகங்களை ஏந்தியவாறு பேரணியாக கல்முனை பிரதேச செயலகத்தை வந்தடைந்தனர். இதையடுத்து பிரதேச செயலகத்தின் கதவை மூடி, வழிமறித்து தமது சுகாதார பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தீர்வை வழங்க வேண்டும் எனக் கோரி அவ்விடத்தில் அமர்ந்திருந்தனர். "கழிவு நீரை வைத்து அரசியல் செய்யாதீர்", "மக்களின் சுகாதார பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்", "முறையான கழிவகற்றல் செய்யப்படவேண்டும்", "மாநகர சபை மௌனம் காப்பது ஏன்?" போன்ற சுலோகங்களை இவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதனையடுத்து அப்பகுதிக்கு வருகை தந்த கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி, பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடியதால், சுமுகமான தீர்வை எட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் பொதுமக்கள் அங்கிருந்து செல்லவில்லை. மாநகரசபை முதல்வர், சுகாதார தரப்பினர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த இடத்திற்கு வருகை தந்து பொது மக்களின் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

பின்னர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்திற்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், கல்முனை மாநகர சபையின் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்சாத் காரியப்பர், பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி, கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சின் பக்கீர், கல்முனை தெற்கு மற்றும் வடக்கு சுகாதார வைத்திய அதிகாரிகள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். இதன்போது, கழிவுநீரை உடனடியாக கல்முனை மாநகர சபையின் உதவியைக் கொண்டு அப்புறப்படுத்துவது எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாடி நிரந்தரத் தீர்வை பெற்றுத் தருவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு உறுதியளித்தனர். எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்த வாக்குறுதியை ஏற்றுக்கொள்ளவில்லை தமது பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும் என கோரி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக பிரதேச செயலக வளாகத்துக்குள் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு,

போக்குவரத்துக்களும் தடைப்பட்டன.

## அக்கரைப்பற்று ஜும்ஆ பெரியபள்ளிவாசலில் புனித ஸஹீஹுல் புகாரி மஜ்லிஸ் ஆரம்பம்

**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

அக்கரைபற்று ஜும்மா பெரிய பள்ளிவாசலில் கடந்த 42 வருட காலமாக ஓதப்பட்டுவரும் புனித ஸஹீஹுல் புஹாரி நிகழ்வுகள, இன்று (03) வியாழக்கிழமை 'சுப்ஹுத்' தொழுகையை தொடர்ந்து ஆரம்பமாகவுள்ளன.

இப்புனித நிகழ்வு தினமும் சுப்ஹுத் தொளுகையை தொட ர்ந்து, கண்ணிய மிக்க உலமாப்பெருமக்களால் ஓதப்பட்டு மஹ்ரிப் தொழுகையின் பின்னர் பயான் செய்யப்படும். ஒரு மாதகாலம் நடைபெறவிருக்கும் இப்புனித மஜ்லிஸ் நிகழ்வுகளில் சகலரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு பிரத்தியேக இடம் ஒதுக்கப்பட்டுள்ளதா கவும் சுகாதார வழிமுறைகளைப்பற்றி கலந்துகொள்ளுமாறு புனித புஹாரிக்குழுவினர் வேண்டுகின்றனர்.

புனித சஹீஹுல் புஹாரி புஹாரிக்குழுவின் தலைவர் ஏ. சுலைமாலெவ்வை இது தொடர்பான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 2621 மாணவர்களுக்கு பட்டமளிப்பு

### எட்டு அமர்வுகளாக விழாக்களை நடத்த திட்டம்

**ஒலுவில் விஷேட நிருபர்**

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2022ம் ஆண்டுக்கான 14 வது பொதுப் பட்டமளிப்பு விழா, எதிர்வரும் (07) திங்கட்கிழமை முதல் 10ம் திகதி வியாழக்கிழமை வரை பல்கலைக்கழக ஒலுவில் வளாக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

பட்டமளிப்பு தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்க்கிழமை (01) பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது. இதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.



உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அங்கு தெரிவித்ததாவது,

தென்கிழக்கு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா எட்டு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.இதில் மொத்தமாக 2621 பேர், பட்டங்களைப் பெறவுள்ளனர்.

திங்கட்கிழமை (07) முதலாவது அமர்வில் பிரயோக விஞ்ஞானம் மற்றும் பொறியியல் ஆகிய பீடங்களைச் சேர்ந்த 475 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படும்.

இரண்டாவது, மூன்றாவது அமர்வுகளில் கலை கலாசார பீடத்தினைச் சேர்ந்த 567 மாணவர்களும், நான்காவது, ஐந்தாவது அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 642 மாணவர்களும் பட்டங்களைப் பெறுவர்.

ஆறாவது, ஏழாவது அமர்வுகளில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த 625 மாணவர்களும், எட்டாவது அமர்வில் கலை கலாசார பீட மற்றும் முகாமைத்துவ வர்த்தக பீடங்களின் 312 வெளிவாரி மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்படும்.

இதேவேளை, வியாபார நிருவாக முதுமாணிப் பட்டங்களை 23 பேரும், முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பட்டங்களை 02 பேரும், 04 பேர் முதுதத்துவமாணி பட்டங்களைப் பெறவுள்ளனர். பட்டமளிப்பு விழா மண்டபத்திற்கு வருகை தரும் மாணவர்களும், பெற்றோர்களும் கொவிட்19 தடுப்பூசி அட்டை, முகக் கவசம் அணிந்து, சமூக இடைவெளி பேணி சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

முதலாவது அமர்வில் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே. கபில பெரேரா, இரண்டாவது அமர்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் திலிப் நவாஸ், மூன்றாவது அமர்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, நான்காவது அமர்வில் ரூஹுனு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் காமினி சேனநாயக்க ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

பேராசிரியர் தில்லைநாதன், முன்னாள் தென்கிழக்குப் பல்கலைக்கழக பதிவாளர் ஜெளபர் சாதிக் ஆகியோருக்கு கௌரவப் பட்டம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களில் மாற்றங்கள்



**ரொட்டவெவ குறூப் நிருபர்**

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு, மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத்தினால் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.இந்த மாற்றங்கள் எதிர்வரும் (07) முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

இதனடிப்படையில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக ஜ.கே.ஜீ.முத்துபண்டாவும்,

ஏ.எச்.எம்.அன்ஸார் வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும்,பீ.கலாமதி முதலமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஜே.ஜே.முரளிதரன் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராகவும், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக எச்.ஈ.எம். டபிள்யூ. ஜீ.திஸாநாயக்காவும்,கிழக்கு மாகாண பேரவையின் செயலாளராக எம்.வை.சலீமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளராக எம். கோபாலரத்னம்,பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) திருமதி ஆர்.யூ.ஜலீல்,பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) மன்சூர் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## சுதந்திர தினத்தை முன்னிட்டு பொத்துவிலில் இரத்ததான நிகழ்வு

**பாலமுனை விஷேட நிருபர்**

நாட்டின் 74வது சுதந்திர தினத்தையொட்டி, பொத்துவில் பிரதேச செயலகத்தில் மாபெரும் இரத்ததான நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இரத்ததான நிகழ்வானது நாளை வெள்ளிக்கிழமை (04) காலை ஒன்பது மணி முதல் மாலை 3.30மணி வரை இடம்பெறவுள்ளது.

பொத்துவில் பிரதேச செயலக நலன்புரிச் சங்கம் பொத்துவில் ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து மேற்படி இரத்ததான நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்புவோர், அன்றைய தினம் பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்து இரத்ததானம் செய்ய முடியும் என நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் எம்.எஸ்.அப்துல் வாசித் தெரிவித்தார்.

## கிழக்கிலங்கை மூத்த உலமாவின் மனைவி நாகூரும்மா காலமானார்

**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

கிழக்கிலங்கையின் பிரபல மூத்த உலமாக்களுள் ஒருவரும் மார்க்க அறிஞருமான அல்ஹாஜ் மௌலவி எம்.எ. ஆப்தீன் ஆலிமின் துணைவியார், நாகூரும்மா என்று அழைக்கப்படும் எம்.ஐ. அவ்வா உம்மா (தனது 84 வது வயதில் செவ்வாய்க்கிழமை (01) அக்கரைப்பற்றில் காலமானார்.

பதினொரு பிள்ளைகளின் (ஏழு பெண், நான்குஆண்) தாயாரான இவரின் ஜனாசா நல்லடக்கம், நேற்று புதன்கிழமை அக்கரைப் பற்று மக்காமடி மையவாடியில் நடைபெற்றது.

இவர் விஷேட வைத்திய நிபுணர் டாக்டர் ஹிதாயா தாஜுதீன், அக்கரைபற்று மாநகரசபை உறுப்பினராக நற்பணியாற்றிய மர்ஹூம் நூருல் ஐன் கலீல் ஆகியோரின் தாயார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்நாரின் கணவரான, ஆப்தீன் ஆலிம் சுமார் ஐம்பது வருடங்கள் புனித ரமழான் காலத்தில் விஷேட ஹதீஸ் மஜ்லிஸை நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விவசாயிகள்,தோட்ட உரிமையாளர்களின் நன்மை கருதி வடிகான்கள் புனரமைப்பு

**கல்குடா தினகரன் நிருபர்**

சௌபாக்கியா திட்டத்தின் கீழ், விவசாயிகள், வீட்டுத் தோட்ட உற்பத்தியாளர்கள், கால்நடை வளர்ப்பாளர்கள் ஆகியோரின் தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாக அரசாங்கத்தினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மஜ்மா நகர் பிரதேச விவசாயிகள், வீட்டுத் தோட்ட உற்பத்தியாளர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்களின் நீர்ப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட உள்ளது. இதன் முன்னோடியாக, இப்பகுதி வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படுகின்றன. முள்ளிவட்டுவான் விவசாய அமைப்பின் முயற்சியால், நீர்ப்பாசன திணைக்களம் இந்த வேலையை ஆரம்பித்துள்ளது.

வாகனேரி நீர்ப்பாசன திட்டத்திலிருந்து காவத்தமுனை வரை, 1953ம் ஆண்டு 13 கிலோ மீற்றர் தோண்டப்பட்ட இவ்வடிகான், ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்திற்கு அமைய தற்போது புனரமைப்பு செய்யப்படுகின்றது.

இதனால், முள்ளிவட்டுவான் விவசாய அமைப்பின்கீழ் உள்ள மஜ்மாநகர், மீயான்குளம், சோதையன்கட்டு, கஞ்சான்வெளி போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள், வீட்டுத்தோட்ட பயிர் செய்கையாளர்கள் என 1500 பேர் நன்மையடைய உள்ளதாக முள்ளிவட்டுவான் விவசாய அமைப்பின் தலைவர் ஐ.எல்.எம். முஸ்தபா தெரிவித்தார்.

## கேணிக்காட்டு கிராமத்தில் சுகாதார நிலையம்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள அக்கரைச்சேனை கேணிக்காட்டு கிராமத்தில்,சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இச்சூழலில் வசிக்கும் பல்வேறு கிராம மக்களின் சுகாதார வசதி கருதியே, இந்த சுகாதார நிலையம் அமைக்கப்படு கின்றது.

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் அனுசரணையுடன், டுபாயை வசிப்பிடமாகக் கொண்ட அஷ்ஷேஹ் அக்கீலின் நன்கொடையின் மூலம், இந்நிலையம் அமைக்கப்படுகிறது.

கேணிக்காட்டு கிராம அபிவிருத்தி சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாககிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் எம்.எம். மனாஸீர் தெரிவித்தார்.

## நாடு முழுவதும் 75 இலட்சம் மரங்களை நடும் திட்டம் சுதந்திர தினத்திலிருந்து ஆரம்பம்



**காரைதீவு குறூப் நிருபர்**

நாட்டின் 75வது சுதந்திரதினம் பவள விழா 2023ஆம் ஆண்டு கொண்டாடப்படவிருக்கிறது. அதனையொட்டி எதிர்வரும் 04ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள 74வது சுதந்திரதினத்திலிருந்து, நாடுபூராகவும் 75இலட்சம் பயன்தரும் மரங்களை நடும் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

சகலஅரச திணைக்களங்கள், நிறுவனங்கள் மூலமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அந்தந்த மாவட்ட செயலகங்கள் இதற்கான முன்னாயத்தங்களை முன்னெடுத்துவருகின்றன.

நாட்டின் 74 ஆவது சுதந்திரதினத்தன்று ஆரம்பித்து வைக்கப்படும் இந்த மரம் நடும் திட்டம் தொடர்ந்து பத்து தினங்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளன.

கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சகல மாகாண வலய கோட்ட கல்விக்காரியாலயங்கள் மற்றும் பாடசாலைகளிலும் மரங்கள் நடப்படவுள்ளன.

# நகர்வலம்



# வரக்காபொல கோர விபத்தில் உயிரிழந்த மூவரினதும் ஜனாஸா நேற்று நல்லடக்கம்

## அரசியல்வாதிகள் உட்பட பெருந்திரளானோர் பங்கேற்பு; சீனன்கோட்டை சோகமயமானது

*அஜ்வாத் பாஸி*

வரக்காபொலையில் இடம்பெற்ற இ.போ.ச பஸ் மற்றும் ஆட்டோ விபத்தில் பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்ததோடு இருவர் படு காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவத்தால் பேருவளை பிரதேசம் சோகமயமானது. இச்சம்பவம் நேற்று முன்தினம் (01) பி.ப 2.30 மணியளவில் துல்ஹிரிய 'மார்க்' தொழிற்சாலைக்கு முன்னாள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் பேருவளையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரான மொஹமட் இக்பால் (வயது 62), அவரது புதல்வர் மொஹமட் இஷ்பான் (வயது 21), அவரது பேரப்பிள்ளை இஷாத் ( வயது 07) ஆகியோரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

பேருவளை ஆரியவன்ஸ பாடசாலையில் ஆசிரியையாக பணியாற்றும்



அவரது மனைவி பாத்திமா நிஹாரா, மகள் பாதிமா இஷ்பா கடும் காயங்களுடன் முறையே வரக்காபொலை அரசாங்க வைத்தியசாலையிலும், கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக குடும்பத்தின் சார்பில் சமூக சேவையாளர் மபாஸ் மஷ்ஹூர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, காலஞ்சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் மொஹமட் இக்பால் தனது குடும்பம் சகிதம் அநுராதபுரத்திலுள்ள உறவினரொருவரின் திருமண வைபவத்தில் கலந்து கொண்டு விட்டு தனது சொந்த ஆட்டோவில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது வரக்காபொலையில் வைத்து ஓட்டுநருக்கு தூக்கம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஆட்டோ பாதையை விட்டும் விலகி பின்னால் வேகமாக வந்த இ.போ.ச வண்டியுடன் மோதியுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. அருகிலுள்ள சீ.சீ.டி கெமராவில் இவை பதிவாகியிருந்தன.

மூவரினதும் ஜனாஸாக்கள் மரண பரிசோதனையின் பின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு நேற்று முன்தினம் இரவு அவர்களின் சொந்த ஊரான பேருவளைக்கு கொண்டு வரப்பட்டபோது பலரும் கதறி அழுததை காணக்கூடியதாக இருந்தது.

இந்த செய்தியை கேள்விப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் மற்றும் அநுராதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் மற்றும் மு.கா தேசிய தலைவர் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம், முன்னாள் எம்.பி அஸ்லம், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல் ஆகியோர் பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டுக்கும் நேரடியாக சென்று குடும்பத்தினருக்கு அனுதாபங்களை தெரிவித்துக் கொண்டனர்.

வீட்டுக்கு கொண்டுவரப்பட்ட மூன்று ஜனாஸாவிற்கும் பிரதேசவாசிகள் உட்பட மூவின மக்களும் தனது இறுதிமரியாதையை செலுத்தியதோடு நேற்று (02) அதிகாலை 3.30 மணிக்கு சீனன்கோட்டை பாஸிய்யா ஜும்ஆ பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டது. நேற்றைய தினம் பேருவளை பிரதேசம் சோகம் நிறைந்து காணப்பட்டதாகவும் நேற்றைய தினமும் அதிகமானோர் ஜனாஸா வீட்டுக்கு வருகை தந்ததை காணக்கூடியதாக இருந்தது.

# அல்லாமா ம. மு. உவைஸ் நூற்றாண்டு பிறந்த நாள் விழா



இஸ்லாமிய இலக்கிய கழகம் நடாத்தும் ஆய்வுப்பேரறிஞர் டாக்டர் அல்லாமா ம. மு. உவைஸ் நூற்றாண்டு பிறந்த நாள் விழா எதிர்வரும் 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 'காணொளி' மூலம் வழியே நடைபெற உள்ளது. இஸ்லாமிய இலக்கிய கழகம் நடாத்திவரும் தொடர் கருத்தரங்கு வரிசையில் 50வது 'பொன் விழா' நிகழ்வாக இது இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காப்பியக்கோ டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், பேராசிரியர் டாக்டர் பீ.மு. அஜ்மல்கான், பேராசிரியர் டாக்டர் ரமீஸ் அப்துல்லா, சிரேஷ்ட சட்டத்தரணி கலாபூஷணம் ரஷீத் எம். இம்தியாஸ் ஆகியோர் மர்ஹூம் ம. மு. உவைஸ் பற்றி சிறப்புரைகளை நிகழ்த்த உள்ளனர்.

இஸ்லாமிய இலக்கிய கழகத் தலைவர் பேராசிரியர் முனைவர் சே.மு.மு. முகமதலி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கழக செயலாளர் பேராசிரியர், முனைவர் மு.இ. அகமது மரைக்காயர் வரவேற்புரையையும், பேராசிரியர் முனைவர் மு. அப்துல் சமது நன்றியுரையையும் நிகழ்த்துவர்.

இந்தியா, இலங்கை,துபாய்,சவூதிஅரேபியா, சிங்கப்பூர், மலேசியா உட்பட உலகளாவிய ரீதியில்பல நாடுகளிளிருந்தும் அறிஞர்கள், இலக்கியவாதிகள் உட்பட பலர் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் 'சூம்' (Zoom) வழியாகவும் 'யூடியூப்' (youtube) மூலமாகவும் அனைவரும் நேரடியாக பங்கு கொள்ளலாம். இணைப்புக்கு:YouTube/SemumuMohamadali, https://youtube.com/channel/UC27UfDCvrO3EdKRIQubJWcA

ZoomMeeting ID : 88604028347, Passcode : iik0015.

# துறைமுக அதிகார சபை முஸ்லிம் மஜ்லிஸினால் புலமைப்பரிசில் வழங்கல்



இலங்கை துறைமுக அதிகார சபை முஸ்லிம் மஜ்லிஸ் வருடாந்தம் நடாத்தும் மர்ஹூம் எம்.எச். எம்.அஷ்ரப் ஞாபகார்த்த புலமைப்பரிசில் மற்றும் 2020, 2021 ஆம் ஆண்டுகளில் ஓய்வு பெற்ற அங்கத்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை (05) பிற்பகல் 2 மணி முதல் 7 மணி வரை சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நடைபெறும்.

வீடமைப்பு நிர்மாணத்துறை முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் முதன்மை பேச்சாளராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் முன்னாள் பதிவாளர் ஏ.எல். ஜவ்பர் சித்தீக், சட்டத்தரணி எஸ்.எம். அப்துல்லாஹ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசீக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# மள்வானையில் சுதந்திர தின நிகழ்வுகள்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 74 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மள்வானை அல் முபாரக் தேசிய பாடசாலையில் அகில இலங்கை அஹதிய்யா சம்மேளனமும் கம்பஹா மாவட்ட அஹதிய்யா சம்மேளனமும் மல்வானை அஹதிய்யா நிறுவனமும் ஒன்றிணைந்து பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களும் அகில இலங்கை பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் அமைப்பும் ஒன்றிணைந்து இலங்கையின் 74வது சுதந்திர தினத்தை வெகு விமர்சையாக கொண்டாடவுள்ளது.

இவ்வாறானதொரு நிகழ்வு பாடசாலை வரலாற்றில் நடைபெறுவது இதுவே முதல் முறையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. நிகழ்வுக்காக நீதிபதிகள், முக்கிய பிரமுகர்கள், ஊர்ப் பிரதிநிதிகள், ஊரின் புத்திஜீவிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சந்தையில் சீமெந்து தட்டுப்பாட்டை ஏற்படுத்த சில குழுக்கள் முயற்சி

## நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பணிப்பு



சீமெந்து விநியோகிக்கும் சில குழுக்கள் திட்டமிட்டு சந்தையில் சீமெந்து தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலையை அதிகரித்து மக்களின் பணத்தைக் கொள்ளையடிப்பதாகவும் அதனை நீக்க நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் வீடமைப்பு அமைச்சு ஒன்றிணைந்து அதிக விலையில் சீமெந்து விற்கும் விநியோகஸ்தர்களைத் தேடி சுற்றிவளைத்து அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கும் அவர்களது அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

அதிக விலைக்கு சீமெந்து விற்பனை செய்யப்படுவதைத் தடுக்கவும் மற்றும் சந்தையில் சீமெந்து தட்டுப்பாட்டைத் நீக்கவும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள், சீமெந்து உற்பத்தி நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலதிபர்கள் மற்றும் சீமெந்து இறக்குமதியாளர்கள் ஆகியோருடன் இராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பிலேயே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் "சீமெந்து இறக்குமதி நிறுவனங்களில் இருந்து ஹார்ட்வெயார்கள் வரை சீமெந்து விற்பனை முறையாக நடப்பதில்லை. விற்பனை முகவர்கள் நுகர்வோருக்கு அவற்றைக் கொடுக்காமல் ஒளித்து வைத்து உயர்ந்த விலையில் விற்கின்றார்கள். இது பற்றித் தேடி அதை நிறுத்துவதற்குரிய வேலைத் திட்டமொன்றை அவசரமாகச் செயற்படுத்த வேண்டும்.

இன்று எமது நாட்டில் சீமெந்து முதலாளிமார் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் அதிகரித்த விலைக்கு சீமெந்தை விற்பனை செய்து முறைகேடுகள்செய்கின்றார்கள். அவற்றை நிறுத்துவதற்கு சீமெந்து இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் தலையிட வேண்டும். இது நிறுத்தப்படாவிட்டால் பெரிய அநீதி நடக்கும்.

உலக பொருளாதார சிக்கல் இருக்கின்ற நிலையில் பொது மக்களுக்கு சலுகைகளைக் கொடுக்க வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புகளை சில மனிதர்கள் கொள்ளையடிப்பதற்கு இடமளிக்க முடியாது. இது விடயத்தில் நுகர்வோர் அதிகார சபை சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் இதனை தனித்து செய்ய முடியாது. அதனால் நாம் எமது அமைச்சின் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளின் உதவியைப் பெற்றுத் தர முடியும் என்றார்.

கொரோனா தொற்று ஆரம்பித்தது முதல்;

# தென் மாகாணத்தில் 1 இலட்சத்து 984 பேர் தொற்றாளர்களாக பதிவு

## 1356 பேர் உயிரிழப்பு – கொவிட் மையம் தெரிவிப்பு

*வெலிகம தினகரன் நிருபர்*

கொவிட் 19 கொரோனா தொற்று ஆரம்பமாகியதிலிருந்து இவ்வருடம் (2022) ஜனவரி மாதம் 31ம் திகதி வரையான காலப்பகுதியில் தென் மாகாணத்தில் ஒரு இலட்சத்து தொல்லாயிரத்து எண்பத்து நான்கு (100,984) தொற்றாளர்கள் இனம் காணப்பட்டதாகவும் இவர்களுள் 1356 பேர் மரணித்துள்ளதாகவும் தென் மாகாண கொவிட் தடுப்பு மையம் தெரிவித்தது. மரணமாகியோரில் காலி மாவட்டத்தில் 821 பேரும் மாத்தறை மாவட்டத்தில் 341 பேரும் மற்றும் ஹம்மாந்தோட்டை மாவட்டத்தில் 194 பேரும் அடங்குவர். மேலும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் போஜ் ஹர்ன்போல் மற்றும் சாரணர் இயக்க பிரதான ஆணையாளர் ஜனாபிரித் பெர்னாண்டோ ஆகியோருக்கு இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இரு நாடுகளிலும் சாரணர்களுக்கு பரஸ்பர ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான எதிர்கால சாரணர் ஊக்குவிப்பு செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

# உடப்பில் தேசிய இளைஞர் தைப்பொங்கல் விழா அமைச்சர் நாமல் உட்பட முக்கியஸ்தர்கள் பங்கேற்பு

*கற்பிட்டி தினகரன் விஷேட , உடப்பு குறூப் நிருபர்கள்*

தேசிய இளைஞர் தைப்பொங்கல் விழா நேற்று (01) புத்தளம் உடப்பில் இடம்பெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இளைஞர் விவகார, விளையாட்டுத்திறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை மற்றும் முந்தல் பிரதேச செயலகம் என்பனவற்றின் ஒத்துழைப்பில் இந்த தேசிய தைப்பொங்கல் விழா நடத்தப்பட்டது.

இந்த விழா செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை ஆகிய இரண்டு



(படங்கள்: உடப்பு நிருபர்)

நாட்களிலும் நடைபெற்றது.

இந்த ஆரம்ப நிகழ்வில் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் தமிந்த விக்ரமசிங்க உட்பட அமைச்சின் அதிகாரிகள், கலைஞர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த விழாவுக்கு வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக 6, 8 வரையான மாணவர்கள் வீதம் கலை நிகழ்ச்சிக்காக அழைத்து வரப்பட்டதுடன, இளைஞர் பாராளுமன்ற சபாநாயகர், பிரதமர், அமைச்சர்கள் உள்ளிட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

அத்தோடு நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஆசிகள் வேண்டி உடப்பு திரௌபதி அம்மன் கோயிலில் விஷேட பூஜை வழிபாடுகளும் நடைபெற்றன.

# தேசமானிய பட்டம் வழங்கி கௌரவிப்பு



பேருவளை, மக்கொனையைச் சேர்ந்து மொஹமட் நஸீர் மொஹமட் நஸ்ரீன் அண்மையில் கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 'அகில இலங்கை தஹம் சுவத பதனம' சங்கத்தின் கௌரவிப்பு விழாவில் தேசமானிய பட்டம் வழங்கி சங்கத்தின் செயலாளர் திரு. துசிதவினால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அகில இலங்கை சமாதான நீதவானாகிய இவர், பேருவளை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும் சிறிது காலம் பணியாற்றியுள்ளார். சமூகப்பணிகளில் தன்னை அர்ப்பணித்து செயலாற்றிய இவர், மக்கொனை ஸ்ரீ சம்புத்த ராஜ வித்தியாலயம் மற்றும் பேருவளை இக்ரா தொழில் நுட்பக்கல்லூரிகளின் பழைய மாணவராவார். இவர் மக்கொனையைச் சேர்ந்த முஹம்மத் நஸீர், பாத்திமா ஸதீகா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார்.

359 பந்தய புறாக்களுடன் இருவர் கைது;

# கைப்பற்றப்பட்ட புறாக்கள் வன அதிகாரிகளால் விடுவிப்பு

*கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்*

புத்தளம் கருவலகஸ்வெவ தப்போவ சரணாலயத்திற்கு அருகில் முன்னெடுக்கப்பட்ட விஷேட சுற்றிவளைப்பின் போது 359 புறாக்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் (30) தெரிவித்தனர்.

வனவிலங்கு சட்டத்தின் கீழ், சரணாலயத்திற்கு அருகில் இருந்து வளர்ப்பு புறாக்களை விடுவிப்பது தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி புறாக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இளைஞர்கள் இருவரும் கண்டி அக்குறனை மற்றும் கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

புத்தளம் தப்போவ சரணாலயப் பகுதியில் குறித்த புறாக்களை பந்தயப் போட்டிக்காக விடுவிக்கும் நோக்கில் குறித்த புறாக்கள் கண்டி அக்குறனை பகுதியில் இருந்து பாதுகாப்பான முறையில் 11 பெட்டிகளில் அடைக்கப்பட்டு லொறி ஒன்றில் கொண்டுவரப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.



சந்தேக நபர்களிடமிருந்து இவ்வாறு மீட்கப்பட்ட புறாக்களில் 165 பெண், 194 ஆண் புறாக்கள் இருப்பதாக தெரியவந்துள்ளது.

அத்துடன், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் பிணையில் விடுதலை செய்த கலுவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், மீட்கப்பட்ட புறாக்கள் அனைத்தும் குறித்த தினம் மாலை கருவலகஸ்வெவ பாடசாலை விளையாட்டு மைதானத்தில் விடுவித்தனர்.

# இம்தியாஸ் எம்.பி இன்று அட்டுலுகம விஜயம்



அட்டுலுகம கலஉடவத்த அல் கஸ்ஸாலி ஆரம்ப வித்தியாலயத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இன்று (03) காலை 9.00 மணிக்கு விஜயம் செய்கிறார்.

பாராளுமன்ற உறுப்பினரின் பன்முக வரவு செலவு திட்ட நிதியிலிருந்து மேற்படி பாடசாலையில் புனரமைக்கப்பட்டு வரும் சுற்றுமதிலை பார்வையிடவுள்ளதோடு பாடசாலை அபிவிருத்தி சம்பந்தமாக பாடசாலை அபிவிருத்திக்குழுவுடன் கலந்துரையாடலொன்றையும் மேற்கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# ஒரு இலட்சம் வாழ்வாதாரத் திட்டங்கள்




## ● தேசிய விவசாய பொருளாதாரத்தை வலுப்படுத்த நடவடிக்கைகள்
## ● சிறிய நுண் தொழில் முனைவோரை வலுப்படுத்தவும் திட்டம்

நாடு பூராவும் ஒரு இலட்சம் வாழ்வாதார திட்டங்களை இன்று ஆரம்பிப்பதோடு முதற்தடவையாக பாரிய அளவில் பணத்தை கிராமங்களுக்கு பெற்றுக் கொடுக்கும் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ் .பி. திசாநாயக்க தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்த கொவிட் தொற்று ஏற்பட்ட முதலாவது அலையின் போது முழு உலகிலேயும் முதலாவது இடத்தில் இருந்தது நாமும் சீனாவும் ஆகும். நாம் அதனை நூறுவீதம் கட்டுப்படுத்தினோம். இரண்டாவது அலை ஏற்பட்டபோது எதிர்க் கட்சி ,மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சில தொழிற்சங்கங்கள் பாரிய அளவில் மக்களை பாதைக்கு கொண்டு வந்து புதிய கொவிட் கொத்தணிகளை உருவாக்கினார்கள். அதனால் அதனை எம்மால் கட்டுப்படுத்த முடியாது போனது. ஆனால் அவ்வேளையில் உலக சுகாதார அமைப்பு இந்த கொவிடை கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசியே சிறந்தது என கூறியது. அதனால் மிகவும் சிரமத்தின் மத்தியில், சிரமமான பொருளாதார நிலைமையில். கடுமையான அன்னியச் செலாவணி பற்றாக்குறை இருந்த போதும் இலங்கை அரசும் ஜனாதிபதியும் தடுப்பூசி வழங்களுக்கு முக்கியத்துவம் வழங்கி மக்களுக்கு அதனை பெற்றுக் கொடுத்தார்கள். நாம் உலகில் முதல் ஆறு இடங்களுக்குள் வெற்றிகரமாக தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம். உலகில் 52 நாடுகள் இன்னும் 6% தடுப்பூசியை கூட பெறாமல் உள்ளன. பலம் வாய்ந்த நாடுகள் எம்மை விட தடுப்பூசி வழங்கலில் முன்னணியில் திகழ்கின்றன. வெற்றிகரமாக தடுப்பூசி வழங்களை மேற்கொண்டதால் இன்று உல்லாசப் பயணிகள் எமது நாட்டிற்கு அதிகளவில் வருகை தருகின்றார்கள். நாம் அவ்விதத்தில் பாரிய வெற்றியை அடைந்துள்ளோம்.

இன்று நாடு பூராவும் ஒரு இலட்சம் வாழ்வாதார திட்டங்களை கோலாகலமாக ஆரம்பித்து வைக்கின்றோம்.அதற்கு தேவையான நிதி, நிதியமைச்சால் எமது பிரதேசங்களுக்கு கிடைத்துள்ளது. இந்த வாழ்வாதார திட்டங்களின் கீழ் தேசிய விவசாய பொருளாதாரத்தை வலுப்படுத்த தேவையான நடவடிக்கை எடுப்பதோடு அதற்கு தேவையான நிதியையும் நாம் ஏற்கனவே கிராமங்களுக்கு பெற்றுக் கொடுத்துள்ளோம். இரண்டாவது விடயம் என்னவென்றால் மிக சிறிய நுண் தொழில் முனைவோரை வலுப்படுத்தும் திட்டத்தை இந்த வாழ்வாதார திட்டத்தின் கீழ் நாம் மிக வேகமாக,வலுவாக செயற்படுத்தி வருகின்றோம். அதனை நாம் மிகவும் கஷ்டமான பொருளாதார நிலைமையிலேயே மேற்கொண்டு வருகின்றோம்.

இன்று எதிர்க்கட்சியினர் அரசாங்கம் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது என கூறுவதற்காக வாயை திறந்து கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். 1971ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் தாக்குதலின் பின்னர் நாட்டின் பொருளாதாரம் தசம் 2 அளவிற்குச் சென்றது.72,78களில் பாரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. மிகவும் கஷ்டமான காலம் தோன்றியது. ஆனால் 1975,76 களில் நாம் மீண்டு வந்தோம்.2009ல் யுத்தத்தில் வெற்றி பெற்று போல எமது பொருளாதாரம் 0 ஆக காணப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி 3.4. அக் இருந்தது. ஆனால் 2009 மற்றும் 2015 வருடங்கள்தான் இலங்கை சரித்திரத்திலேயே பொருளாதார வளர்ச்சியின் பொற்காலமாகும். தெற்காசியாவிலேயே வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடாக விளங்கியது. அவ்வாறு செய்த மனிதர்கள் தான் இன்றும் இந்த அரசாங்கத்தை நடத்துகிறார்கள். நாம் இந்த பிரச்சினைகளிலிருந்து மீள்வோம். அனைவரும் இந்த நாடு அழிந்து விடும் என்று கூறினாலும் நாம் அதிலிருந்து மீண்டு வருவோம். தற்போது சுற்றுலா துறை வேகமாக உயிர்ப்படைந்துள்ளது. அத்துடன் எமக்கு துறைமுக நகரின் ஊடாக எமது பொருளாதாரத்தை பலப்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம் . "

**பாராளுமன்ற உறுப்பினர் உபுல் கலப்பத்தி**

எமது அரசாங்கம் இரண்டு வருடத்திற்கும் அதிகமாக ஆட்சியில் உள்ளது. அந்த இரண்டு வருடத்தில் மூன்று மாதங்களை தவிர ஏனைய காலங்கள் கொரோனா தொற்றுடனேயே கழிந்தன. இந்த உலக சவாலுக்கு நாம் மிகவும் வெற்றிகரமாக முகம் கொடுத்துள்ளோம். அதன் பலனை நாம் தற்போது அனுபவிக்கின்றோம். நாம் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை மேற்கொண்டோம். ஆனால் அன்று பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் பாராளுமன்றத்துக்கு வெளியேயும் எதிர்க்கட்சியினரும் அனைத்து அரசியல் கட்சிகளும் எமது தடுப்பூசி திட்டத்துக்கு எமது அரசின் மீது போலியான குற்றச்சாட்டுகளை சுமத்தினார்கள். ஆனால் நாம் 35 மில்லியன் நாட்டு மக்களுக்கு தடுப்பூசியை வழங்கியுள்ளோம். உலகில் பல வளர்ச்சியடைந்த நாடுகள் மூடப்பட்டு இருக்கும் வேளையில், அவர்களின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்த நிலையில் எமது நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்காக நாட்டை திறந்தோம். இந்நாட்டு மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தினோம். இன்று எமது பிள்ளைகள் பாடசாலைக்கு சுதந்திரமாக செல்வதற்கு வழி வகுத்துள்ளோம். உல்லாசப் பயணிகள் பெருமளவில் நாட்டுக்குள் வருகின்றார்கள். இவை அனைத்தோடும் ஜனாதிபதியின் தூர நோக்கு தலைமை, பிரதமர் ,நிதி அமைச்சர் உள்ளிட்ட அனைவரினதும் நடவடிக்கைகளால் இந்த தடுப்பூசித் திட்டத்தின் மூலம் இன்று வெற்றிகரமான நாடாக எமது நாடு மாறியுள்ளது. எதிர்க்கட்சியினர் அன்று கூறிய அனைத்தும் புஸ்வாணமாகியுள்ளன. அதுபோல் பொருளாதாரம் தொடர்பாக அவர்கள் கூறும் கதையை இந்த மூன்று வருடத்திற்குள் புஸ்வாணம் ஆக்குவோம்.

அதற்கான நடவடிக்கையாகவே 2022 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி அமைச்சர் 85 மில்லியன் கிராமத்துக்கு செல்லும் திட்டமொன்றை இன்று ஆரம்பிக்கின்றார். நிதியானது சரியான வழியில் கிராமத்தில் உள்ள வறிய மக்களுக்கு தொழில் முனைவோருக்கு செல்லும்போது அந்த தொழில் முனைவோரால் எமது பொருளாதாரம் மீட்சி அடையும்.அதன் மூலம் தற்போது அவர்கள் எம் மீது சுமத்தும் குற்றச்சாட்டுகளை புஸ்வாணம் ஆக்குவோம். அதற்கான திட்டங்கள் அரசு என்ற வகையில் எமக்கு உண்டு.கொவிட் தொற்று காரணமாக விவசாயத்தில் ஓரளவு பின்னடைவு உண்டு. ஆனால் அந்த பின்னடைவு மூலம் நாம் முன்னோக்கி செல்வோம். நாம் எதிர்காலத்தில் புதிய திட்டங்களின் மூலம் இந்த விவசாயத்தை மேம்படுத்த , வர்த்தக விவசாயத்தை மேம்படுத்த திட்டங்களை மேற்கொள்வோம்.

ஒரு நாடாக நாம் முன்னோக்கி செல்ல வேண்டுமென்றால் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டும். இந்நாட்டில் புதிய திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். அதனால் தான் நாம் துறைமுக நகரத் திட்டத்தை ஆரம்பித்தோம். அது போன்று அரசாங்கம் காலி நகரிலும் துறைமுக நகரத்தை நிர்மாணிக்க தீர்மானித்துள்ளது. இவ் அனைத்து திட்டங்களுடன் நாட்டை மூன்று வருடங்களுக்குள் பொருளாதார வளர்ச்சியை நோக்கி இட்டுச் செல்வோம்.

இன்று எதிர்க்கட்சிகள் கூறுபவற்றை ஒரு வருடத்துக்குள் இந்த 3வது வருடம் பூர்த்தி அடையும் வேளையில் புஸ்வாணமாக்கிக் காட்டுவோம் என கூறினார்.

தமிழில்: வீ.ஆர்.வயலட்...

# பொலிஸ் உத்தியோகத்தர் இக்பாலின் திடீர் மறைவிற்கு ஹக்கீம் அனுதாபம்

வரக்காபொலையில் இடம்பெற்ற திடீர் விபத்தில் உயிரிழந்த ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் மொஹமட் இக்பால் உட்பட அவரது புதல்வர் மற்றும் பேரப்பிள்ளையின் திடீர் உயிரிழப்புச் செய்தி கேட்டு தான் அதிர்ச்சியடைந்ததாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

காலமான பொலிஸ் உத்தியோகத்தரின் சீனன்கோட்டை இல்லத்திற்கு நேற்று (02) காலை விஜயம் செய்து அன்னாரின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொண்டார். இதன்போது முன்னாள் மு.கா பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லமும் உடனிருந்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ரவூப் ஹக்கீம் எம்.பி, மறைந்த பொலிஸ் உத்தியோகத்தர் மொஹமட் இக்பால் மிகவும் நேர்மையும் நம்பிக்கையும் கொண்டவர். எனது மெய் பாதுகாவலராக சுமார் 10 வருடம் பணிபுரிந்தார். அவரிடம் இருந்த தன்னம்பிக்கையினால் உயர் பதவிகளும் கிடைக்கப்பெற்றன. பல சம்பவங்களின் போது அவரது உயிரைவிடவும் எனது உயிர் துச்சமென மதித்து செயற்பட்ட அந்த நாட்கள் இன்னும் நினைவுக்கு வருகின்றன.

வரக்காபொலையில் இப்படியானதொரு துயர் சம்பவம் இடம்பெறும் என்று கூட அவர் நினைத்திருந்திருக்கமாட்டார். அல்லாஹ்வுடைய நியதியின் அடிப்படையில் அது நடந்துள்ளது. அல்லாஹ்வின் நியதியை முஸ்லிம் என்ற வகையில் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

மறைந்த இக்பால் உட்பட அவரது புதல்வர், பேரன் ஆகியோருக்கு வல்ல நாயன் மேலான ஜென்னதுல் பிர்தௌஸை வழங்க வேண்டும் என பிரார்த்திப்பதோடு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அன்னாரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் விரைவாக குணமடைந்து வீடு திரும்ப பிரார்த்திப்பதாகவும் ரவூப் ஹக்கீம் தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

# தேசிய தின நிகழ்வும் பிரார்த்தனைக் கூட்டமும்

இலங்கையின் 74 ஆவது தேசிய தினத்தை முன்னிட்டு 74 தேசிய தின நிகழ்வு மற்றும் பிரார்த்தனைக் கூட்டம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.45 முதல் இரவு 7 வரை இல. 422, குரண, கட்டுநாயக்க 'தெத்செமன' ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டிற்காகவும் மக்களின் சுகநலத்திற்காக பிரார்த்தனையில் ஈடுபட கிறிஸ்தவ மக்களுக்கு 74 ஆவது தேசிய தினத்தன்று ஆலயத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது.

| DETAILS OF VACCINATION STATIONS ON 02.02.2022 - Sinopharm 1st Dose | | | |
|---|---|---|---|
| Ser No | Disrict | S/N | Place |
| 1 | Colombo | 1 | Viharamaha devi park |
| | | 2 | Diyatha Uyana |

| DETAILS OF VACCINATION STATIONS ON 02.02.2022 - Sinopharm 2nd Dose | | | |
|---|---|---|---|
| Ser No | Disrict | S/N | Place |
| 1 | Colombo | 1 | Viharamaha devi park |
| | | 2 | Diyatha Uyana |

| DETAILS OF VACCINATION STATIONS ON 02.02.2022 – PFIZER BOOSTER DOSE (ABOVE 20 YEARS) | | | |
|---|---|---|---|
| Ser No | Disrict | S/N | Place |
| 1 | Colombo | 1 | Viharamaha devi park |
| | | 2 | Diyatha Uyana |
| | | 3 | 1 SLAMC |
| | | 4 | Bodirajaramaya - Panagoda |
| | | 5 | Army Headquarters Mobile Teams X 5 |
| 2 | Kalutara | 1 | MOH - Wadduwa |
| | | 2 | Mathugama - Walallavita |
| 3 | Jaffna | 1 | MOH - Chankanai |
| | | 2 | MOH - Chavakachcheri |
| | | 3 | MOH - Jaffna |
| | | 4 | MOH - Karainagar |
| | | 5 | MOH - Karaveddy |
| | | 6 | MOH - Uduvil |
| | | 7 | MOH - Kayts |
| | | 8 | MOH -Kopay |
| | | 9 | MOH - Maruthankerny |
| | | 10 | MOH - Nallur |
| | | 11 | MOH - Point Pedro |
| | | 12 | MOH - Sandilipay |
| | | 13 | MOH - Tellipalai |
| | | 14 | MOH - Velanai |
| | | 15 | 4 SLAMC |
| | | 16 | Mobile Vaccination |
| 4 | Anuradhapura | 1 | AH ANP |
| | | 2 | Mobile Vaccination 1 |
| | | 3 | Mobile Vaccination 2 |
| | | 4 | Mobile Vaccination - 62 DIV |
| 5 | Kandy | 1 | Mobile Vaccination |
| 6 | Kurunegala | 1 | MOH - Kurunegala |
| 7 | Puttlam | 1 | MOH - Puttalam |
| 8 | Polonnaruwa | 1 | Mobile Vaccination 1 |
| | | 2 | Mobile Vaccination 2 |
| | | 3 | Mobile Vaccination 3 |
| 9 | Batticaloa | 4 | Mobile Vaccination X 3 (23 DIV ) |
| 10 | Mulaitivu | 1 | Mobile Vaccination 1 |
| | | 2 | Mobile Vaccination 2 |
| 11 | Kilinochchi | 1 | ABH KLN |
| | | 2 | Mobile Vaccination |
| 12 | Ampara | 1 | Mobile Vaccination |
| | | 2 | |
| 13 | Trincomalee | 1 | Mobile Vaccination X 3 |
| | | 2 | Mobile Vaccination X 2 |
| 14 | Matara | 1 | Mobile Vaccination |
| | | 2 | Mobile Vaccination |
| 15 | Monaragala | 1 | Mobile Vaccination |
| 16 | Badulla | 1 | ABH DLA |
| 17 | Nuwara Eliya | 1 | Mobile Vaccination |
| 18 | Hambanthota | 1 | Mobile Vaccination - Hambanthota |
| 19 | Mannar | 1 | Mobile Vaccination |
| 20 | Matale | 1 | Mobile Vaccination ( Dambulla Area ) |
| | | 2 | Barren Hall |

| SPECIAL MOBILE VACCINATION PROGRAM- 02.02.2022 ( SFHQ WISE ) | | | |
|---|---|---|---|
| 1 | SFHQ ( WEST ) | 1 | Mobile Vaccination ( X 10 Teams ) |
| 2 | SFHQ ( WANNI ) | 2 | Mobile Vaccination ( X 3 Teams ) |
| 3 | SFHQ ( CENTRAL ) | 3 | Mobile Vaccination ( X 6 Teams ) |
| 4 | SFHQ ( EAST ) | 4 | Mobile Vaccination ( X 8 Teams ) |
| 5 | SFHQ ( MUL ) | 5 | Mobile Vaccination ( X 4 Teams ) |

# 74வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மரநடுகை



74வது சுதந்திர தினத்தை முன்னிட்டு அரசாங்கத்தின் ருத்ரோபன தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் மர நடுகை நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவிலுள்ள றகுமானியா நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் (1) இடம் பெற்றது.

கிராம உத்தியோகத்தர் ஏ.சி.ஏ. பரீட் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மரக்கன்றை நட்டி வைத்தார்.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எஸ்.பாஹிமா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜிப், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.சமீமா, சமுர்த்தி உத்தியோகத்தர் எம்.உவைஸ், சமுர்த்தி முகாமையாளர், கரையோரம் பேணல் திட்ட உதவிப் பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்கள், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், விளையாட்டு சங்க உறுப்பினர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் உள்ளிட்டோ இதில் கலந்து கொண்டு கரையோரத்தில் மரக் கன்றுகளை நட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# பாவித்த முகக்கவசங்களால் சூழலுக்கு பாதிப்பு



## சுற்றாடல் அதிகாரிகள் தெரிவிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

வீதிகளில் வீசி எறியப்படும் பாவித்த முகக் கவசங்களால் (மாஸ்க்) சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பை உண்டு பண்ணுவதாக சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எதிர் காலத்தில் இது ஒரு பிரச்சினையாக உருவெடுக்கும் வாய்ப்பும் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

பாவிக்கப்பட்ட முகக் கவசங்களை ஒழுங்கு முறையில் அகற்றுவதற்கு பதிலாக வீதிகளில் வீசி எறியப்படுவதாலேயே இப் பிரச்சினை உருவாகின்றது.

நாட்டின் பிரதான வீதிகள் மற்றும் கிராமப்புற வீதிகளில் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் பாவிக்கப்பட்ட முகக் கவசங்கள் வீதிகளில் வீசி எறியப்பட்டும் காட்சிகள் பதிவாகியுள்ளன.

# கட்டிமுடிக்கப்பட்ட வைத்தியசாலையை திறக்குமாறு கரைத்தீவில் ஆர்ப்பாட்டம்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் கரைத்தீவு கிராமத்தில் கட்டி முடிக்கப்பட்ட கரைத்தீவு வைத்தியசாலையை திறந்து தருமாறும், அங்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறும் கோரி, கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.இந்த ஆர்ப்பாட்டத்தை, கரைத்தீவு பொன்பரப்பி சிவில் அமைப்பு ஏற்பாடு செய்தது. பாதிக்கப்படும் சேராக்குழி மற்றும் கரைத்தீவு மக்கள் பலர் இதில் பங்குபற்றியதுடன் சர்வ மத தலைவர்களும் கலந்து கொண்டனர்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தினால் இரண்டு கோடி ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட சகல வசதிகளையும் கொண்ட இந்த வைத்தியசாலை, மூன்று வருடங்களாக

இயங்காதுள்ளது.இதனால்,வெறும் பாழடைந்த கட்டடமாக மாறிவருவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.இந்நிலைமையை இல்லாது செய்ய,

அவசரமாக வைத்தியர் ஒருவரை நியமித்து, வைத்தியசாலையை மக்கள் பாவனைக்கு அவசரமாக வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

சுகயீனம் ஏற்பட்டவர்களை குணப்படுத்துவதற்காக பத்து கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள, வண்ணாத்திவில்லு வைத்தியசாலைக்கு அல்லது நாற்பது கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள புத்தளம் வைத்தியசாலைக்கே செல்ல வேண்யுள்ளமை கவலைக்குரிய விடயம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இளைஞர்கள் பலர் கலந்துகொணடமையும் குறிப்பிடத்தக்கது.



இலங்கையில் கொவிட் தொற்று பரவலுக்குள், மருந்தகங்களிலிருந்து மருந்துகளை வீட்டிலேயே இலவசமாக விநியோகித்தல், பொலிஸ் நிலையங்கள், பாடசாலைகளில் கிருமி தொற்று நீக்கம் செய்தல், இரத்ததானம், சிவனொளிபாதமலை, கதிர்காமம் உற்சவங்கள் மற்றும் சுகாதாரம் போன்றவற்றை நடைமுறைப்படுத்த மனிதாபிமான உணர்வுடன் பங்களித்த சென்ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் சேவை மேலதிக ஆணையாளர், சுலோசன கமகேவுக்கு விருது வழங்கி கௌரவித்துள்ளார்.கொழும்பு மாவட்ட ஆணையாளர் எம்.டி.பி சேனாநாயக்க செயலாளர் அனுஷா பீரிஸ் மற்றும் ஐக்கிய ஒத்துழைப்பு மன்ற ஆலோசகர் வண. தங்காலை குணரதன தேரர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

கட்டிடங்கள் திணைக்களம்


# கேள்விகளுக்கான அழைப்பு

## யாழ்ப்பாணத்திலுள்ள மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு நான்கு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்தல்

**(ஒப்பந்த இல. 04-03-16-2022/CT01)**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் 59.7 மில்லியன் ரூபா (வட் வரியின்றி) மதிப்பீட்டுச் செலவுடையதுமான யாழ்ப்பாணத்திலுள்ள மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு நான்கு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்தல் எனும் பணிகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழு தலைவர் கோருகிறார்.
   நிர்மாணக் காலம் 450 நாட்கள்.
2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் (NCB) முறையின் கீழ் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) கட்டிடத் நிர்மாணத் துறைக்காக C4 அல்லது C3 தரத்தில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
   ''பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை *(Original Certificate of PCA 03)* கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். *PCA 03* பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்படமாட்டாது.''
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் யாழ்ப்பாணம், குருநகர், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 2), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4..00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 021-2222781 தொலைநகல்: 021-2222781
5. மீளளிக்கப்படாத கட்டணமாக பதிமூவாயிரம் ரூபாவை (ரூபா 13,000.00) 2022-02-03ஆம் திகதி முதல் 2022-02-23ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் யாழ்ப்பாணம், குருநகர், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 2), பிரதம பொறியியலாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத்தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. கேள்விகளை 2022-02-24ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடத் திணைக்களம், 2ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டிடங்கள் திணைக்களத்தின் 2ம் மாடியின் ஒப்பந்தக் கிளையில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 91 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 9ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 800,000.00 ரூபா தொகைக்கு
   * 2022 ஜூன் 22ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித்தரவின் 16.2ம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட கேள்விப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. கேள்விகள் முடிவடைவதற்கென நிர்ணயிக்கப் பட்டுள்ள நேரத்துக்குக் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரே பாதுகாப்புச் சோதனைகளின் நிமித்தம் ''செத்சிறிபாய'' வளவுக்குள் வந்துவிடுமாறு கேள்விதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**பொறி. எம்.எச்.எம். இஸ்மாயில்,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**




தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)**

## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன தலைமை அலுவலகத்திற்கு வாகனங்களை வாடகைக்கமர்த்துவதற்கான பெறுகை அறிவித்தல்

ஒரு வருட காலத்திற்கு கொழும்பு-05, இல. 99/1, ஜாவத்த வீதியில் அமைந்துள்ள NBRO தலைமை அலுவலகத்திற்கு பின்வரும் வகுதிகளிலான வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வாகனத்தின் வகை | வாகனங்களின் எண்ணிக்கை | ஆசன கொள்ளளவு | குறைந்தபட்ச மாதாந்த ஓட்டம் (கி.மீ.) |
|---|---|---|---|
| வேன் (Dual A/C) | 12 | 08 | 2000 |
| டபள் கெப் (A/C) | 01 | 04 | 2000 |
| மோட்டர் கார் (A/C) | 01 | 04 | 2000 |

* மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து விலைமனு ஆவணத்தினைப் பார்க்கவும்.

மீளளிக்கப்படாத 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள NBRO தலைமை அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை விலைமனுக்கள் முடிவுறுத்தல் திகதியான 2022 பெப்ரவரி 22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022 பெப்ரவரி 14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு NBRO தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி,**
**கொழும்பு 05.**
**தொலைபேசி: 011-2588946 தொலைநகல்: 011-2502611**

இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2021 (2022)

## கொவிட் - 19 வைரஸ் தொற்றுக்குள்ளான, தனிமைப்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்

1. **தனிமைப்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்காக**
   - தனிமைப்படுத்தப்பட்ட சகல பரீட்சார்த்திகளும் தமது அனுமதி அட்டையிலுள்ளவாறு தமக்கு உரிய பரீட்சை நிலையங்களுக்குச் செல்ல வேண்டுமென்பதுடன், அப் பரீட்சை நிலையங்களில் அமைந்துள்ள விசேட அறைகளில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் தாம் தனிமைப்படுத்தலுக்குள்ளாகியிருக்கின்றனரென மேற்பார்வையாளருக்கு அறியத் தருதல் வேண்டும்.
2. **கொவிட் 19 தொற்றுக்குள்ளான பரீட்சார்த்திகளுக்காக**
   - கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளான பரீட்சார்த்திகளுக்காக மாவட்ட ரீதியில் கீழே) காட்டப்பட்டுள்ளவாறு வைத்தியசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள விசேட நிலையங்களில் தமக்குரிய மாவட்டத்தில் அமைந்துள்ள விசேட பரீட்சை நிலையம் ஒன்றில் அல்லது தமக்கு வசதியான அருகிலுள்ள விசேட பரீட்சை நிலையம் ஒன்றில் தங்கியிருந்து பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அப்பரீட்சார்த்திகளுக்காக தேவையான சகல வசதிகளும் அப்பரீட்சை நிலையத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

**கவனிக்கவும் :** இது தொடர்பாக சகல சுகாதாரப் பிரிவினருக்கும் அறிவித்ததுடன் தமக்குரிய மாவட்டம்/ பிராந்திய சுகாதார வைத்தியர்களின் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

| மாவட்டம் | விசேட பரீட்சை நிலையம் |
|---|---|
| கொழும்பு | மாவட்ட வைத்தியசாலை, லுணாவ, மொரட்டுவ. |
| கம்பஹா | வெரலுவத்த, இடைத்தங்கல் சிகிச்சை நிலையம், யக்கல. |
| களுத்துறை | ஆதார வைத்தியசாலை, பிம்புர, அகலவத்தை. |
| காலி | புதிய மாவட்ட வைத்தியசாலை, கரந்தெனிய. |
| மாத்தறை | புதிய மாவட்ட பொது வைத்தியசாலை, கம்புரகமுவ. |
| அம்பாந்தோட்டை | மாவட்ட வைத்தியசாலை, அம்பாந்தோட்டை. |
| இரத்தினபுரி | மாவட்ட வைத்தியசாலை, நிவிதிகல. (இடைத்தங்கல் சிகிச்சை நிலையம்) |
| கேகாலை | மாவட்ட வைத்தியசாலை, வரக்காபொல. |
| குருநாகல் (பெண்கள்) | மாவட்ட வைத்தியசாலை, அளவ்வ. |
| குருநாகல் (ஆண்கள்) | மாவட்ட வைத்தியசாலை, அம்பன்பொல. |
| புத்தளம் | மாவட்ட வைத்தியசாலை, தங்கொட்டுவ. |
| அநுராதபுரம் (ஆண்கள்) | மாவட்ட வைத்தியசாலை, கலேன்பிந்துனுவெவ. |
| அநுராதபுரம் (பெண்கள்) | மாவட்ட வைத்தியசாலை, தம்மன்னாவ. |
| பொலன்நறுவை | ஆதார வைத்தியசாலை, ஹிங்குரக்கொட. |
| மாத்தளை | மாவட்ட வைத்தியசாலை, லக்கல, பல்லேகம. |
| கண்டி | பல்லேகெலே ஆயுர்வேத வைத்தியசாலை, பல்லேகெலே. |
| நுவரெலியா | மாவட்ட வைத்தியசாலை, வலப்பனை. |
| பதுளை (பெண்கள்) | இடைத்தங்கல் பராமரிப்பு நிலையம், கஹகொல்ல. |
| பதுளை (ஆண்கள்) | இடைத்தங்கல் பராமரிப்பு நிலையம், பதுளை |
| மொனராகலை | மாவட்ட வைத்தியசாலை, தணமல்வில (இ.த.நி. சர்வோதயம்) |
| அம்பாறை | மாவட்ட பொது வைத்தியசாலை, அம்பாறை. |
| மட்டக்களப்பு | மாவட்ட வைத்தியசாலை, கல்லாறு. |
| திருகோணமலை | மாவட்ட வைத்தியசாலை, குச்சவெளி. |
| கல்முனை | ஆயுர்வேத நிலையம், அட்டாளைச்சேனை. |
| யாழ்ப்பாணம் | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை. |
| கிளிநொச்சி | ஐ.டி.எச், கிளிநொச்சி |
| வவுனியா | இடைத்தங்கல் நிலையம், பம்பைமடு |
| மன்னார் | மாவட்ட வைத்தியசாலை, மன்னார் |
| முல்லைத்தீவு | ஆதார வைத்தியசாலை, மாங்குளம் |

இது தொடர்பாக ஏதேனும் விசாரணை இருப்பின் தயவு செய்து கீழேயுள்ள தொலைபேசி எண்களுடாக தொடர்பு கொள்ளமுடியும்.

**விசாரணை:- தொலைபேசி இலக்கம் - 011-2784208, 011-2784537,0112785212**
**தொலைநகல் இலக்கம் - 011-2784422**

**பரீட்சைக் காலம் முழுவதும் 24 மணித்தியாலங்களும் செயற்படும் அலகு இலக்கங்கள் 0112784208, 0112784537, 0112786616**
**உடனடி அழைப்பு இலக்கம் 1911**

**எல்.எம்.டீ. தர்மசேன**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பரீட்சைத் திணைக்களம்

## 2ஆவது விடைப்பத்திரத்தின் பெறுகை

**ஒப்பந்த இல.: 04/03/14/2021/22**

குறைந்தபட்ச கீழ் குறிப்பிடப்பட்ட அனுபவம் ஒன்றை பெற்ற பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கீழுள்ள அட்டவணையில் உள்ள 2ஆவது விடைப்பத்திரத்தின் பெறுகைக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் பரீட்சைத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனு ஆவணத்தில் விரிவான விபரம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| தொடர் இல. | விலைமனு பெயர் | அளவு | விலைமனு பிணை தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 01 | 2ஆவது விடைப்பத்திரங்களின் பெறுகை (04/03/14/2021/22) | 22,000 Reams | ரூபா 200,000.00 |

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகைமைக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இதனை ஒத்த உருப்படிகளின் வழங்களில் மூன்று ஆண்டுகள் அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தத்தின் 06ஆம் பிரிவுக்கு அமைய பொது ஒப்பந்தங்கள் பதிவாளர் மூலம் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டும்.
5. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் பரீட்சைத் திணைக்கள, 03ஆவது மாடி, வழங்கல் பிரிவில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொலைபேசி: 011-2786200 அல்லது 011-2784201) என்பதோடு 2022.02.23ஆம் திகதி வேலை நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
6. ஒவ்வொரு ஆவணத்திற்காகவும் 5,000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2022.02.23 ஆம் திகதி பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் வர்த்தக பதிவு கடிதத்தின் பிரதியுடன் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து வழங்கல் பிரிவில் இருந்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம் (கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்த வேண்டும்).
7. விலைமனு 90 நாட்கள் வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் விலைமனு ஆவணத்திற்கு இணைக்கப்பட்ட வடிவத்தில் இலங்கையில் இயங்கும் புகழ் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாக இரண்டுலட்சம் இலங்கை ரூபாவின் (இ.ரூபா 200,000.00) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அது விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 120 நாட்கள் வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களை 2022.02.24 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் வழங்கல் பிரிவு, 3ஆவது மாடி, பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது திருப்பித் தரப்படும். விலைமனுக்கள் மூடப்பட்ட பின் மேல் தரப்பட்ட முகவரியில் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
10. முறையாக பூர்த்தி செய்யப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2ஆவது விடைப்பத்திரத்தின் பெறுகை ஒப்பந்த இல.: 04/03/14/2021/22 என்று குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
11. எந்தக் காரணமும் கூறாமலேயே எந்தவொரு விலைமனுவையும் அல்லது அனைத்தையும் நிராகரிப்பதற்கும் அல்லது விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழிப்பதற்கும் அதேபோன்று எந்த விலைமனுவையும் அல்லது எந்த விலைமனுவின் பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை பரீட்சைத் திணைக்களத்தின் பெறுகைக் குழு கொண்டுள்ளது.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்**
**இலங்கை, பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்லை.**
**2022.02.03**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## FMRP திட்டத்தின் கீழ் பிரத்தியேக தன்னியக்க கிளை பரிவர்த்தனை முறைமையைப் பராமரித்தல்

**ஒப்பந்த இலக்கம் : IR/PAM/6/28/86/2022**

01. "FMRP திட்டத்தின் கீழ் பிரத்தியேக தன்னியக்க கிளைப் பரிவர்த்தனை முறைமைக்காக" தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுவின் (பாரிய) தலைவர் கோருகின்றார்.
    பராமரிப்பு காலம் 1 வருடமாகும்.
02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறைமையின் ஊடாக விலைக்கோரல் நடாத்தப்படும்.
03. விலைமனு சமர்ப்பித்தல் மற்றும் ஒப்பந்தங்களை கையளிக்கப் பெறுவதற்கான தகைமை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர்
    - அ) ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் ஒப்பந்ததாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும் என்பதுடன் இது சம்பந்தமான சத்தியக்கடதாசியை சமர்ப்பித்தல் வேண்டும்.
    - ஆ) இலங்கையில் செல்லுபடியாகும் வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - இ) அரசாங்க திணைக்களங்கள்/நிறுவனங்கள் அல்லது மிகவும் கீர்த்தி வாய்ந்த தனியார் கம்பனிகளில் பிரத்தியேக தன்னியக்க கிளைப் பரிவர்த்தனை முறைமையைப் பராமரிப்பில் குறைந்தபட்சம் 05 வருட அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
    - ஈ) கடந்த மூன்று (3) ஆண்டுகளில் முன்னேற்றமான அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கான மொத்த உறுதி செய்யப்பட்ட கட்டணங்களுக்கான கணக்கெடுப்பில் குறைந்தபட்சம் 15 மில்லியன் இல. ரூபா வருடாந்த புரள்வைக் கொண்டிருத்தல்
    - உ) பராமரிப்பு பணியாட்கள் குழுவின் பிரதான ஊழியர் குழாமிற்கு குறைந்தபட்சம் 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
04. கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், 07ஆம் மாடியில் உதவிப் பணிப்பாளர் (ICT) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களை விலைமனுதாரர்கள் பெற்றுக்கொள்ளலாம்.
05. மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரம் ரூபாவைச் (ரூ. 2000/-) செலுத்துவதன் பேரில் 2022.02.03ஆம் திகதி முதல் 2022.02.23ஆம் திகதி வரை 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.
06. 2022.02.24ஆம் திகதி 14.00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், 15ஆம் மாடி, பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவ கிளை, திணைக்களப் பெறுகைக்குழு (பாரிய) தலைவருக்கு விலைமனுக்கள் கட்டாயமாக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்களால் சமுகமளிப்பதற்கு தேர்ந்தெடுத்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும்.
07. விலைமனுக்கள் 2022.05.24ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
08. இலங்கை ரூபா ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் (ரூ. 175,000.00) கொண்ட ஓர் விலைமனு பிணை எல்லா விலைமனுவுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் பெயரில் இலங்கை மத்திய வங்கியால் அனுமதிக்கப்பட்ட ஓர் வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் விலைமனு ஆவணத்தின் அனுமதிக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் வங்கிப்பிணை படிவத்தில் மாத்திரமான ஓர் விலைக்கோரல் பிணை முறியாகவிருத்தல் வேண்டும் அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் காசாளருக்கு ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். 2022-06-24ஆம் திகதி வரை விலைமனுப்பிணை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகை குழு (பாரிய)**
**பெறுகை மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ கிளை,**
**15ஆம் மாடி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

2022-02-03ஆம் திகதி.

# விலை மனுக்கோரல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**விலைக்கேள்வி இலக்கம் : 084/T/2021**

